Registered as a Newspaper    பக்கங்கள் 6

விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM    மக்கள் தினசரி    PEOPLES DAILY

நாதம் 5    திருவள்ளுவர் ஆண்டு 2025    ஐப்பசி 08    25-10-94    செவ்வாய்க்கிழமை    ஓசை 249

## திருமதி காமினி விரும்பின் விசாரணைக்கு சர்வதேச உதவி

காமினி திசாநாயக்காவின் கொலை பற்றிய பூரண விசாரணைகளை நடத்துவதற்கு சர்வதேச ரீதியான நிறுவனங்களின் உதவிகளைப் பெறுவதற்கோ சர்வதேச பொலிசாரின் உதவிகளைப் பெறுவதற்கோ திருமதி திசாநாயக்கா விரும்பினால் அதற்கான நடவடிக்கைகளை எடுக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக பிரதமர் சந்திரிகா குமாரதுங்கா கூறியுள்ளார்- கொலையான காமினி திசாநாயக்காவின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த கவலைகளை தெரிவிக்கும் அதே வேளை இக் கொலையை (5ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பு நகரில் பாரிய குண்டுவெடிப்பு; காமினி, முன்னாள் அமைச்சர்களும் பலி!

## ஐ. தே. க. செயலாளரும் கொல்லப்பட்டார்

(கொழும்பு)

கொழும்பு கொட்டாஞ்சேனை பகுதிக்கு அருகில் உள்ள பாலத்துறையில் நேற்று அதிகாலை இடம் பெற்ற குண்டு வெடிப்பு சம்பவத்தில் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான காமினி திசாநாயக்கா கொல்லப்பட்டார்· மேலும் இக்குண்டு வெடிப்பு சம்பவத்தில் முன்னாள் அமைச்சர்களான வீரசிங்க மல்லிமாராச்சியும் ஜி. எம். பிரேமச்சந்திராவும் மற்றும் ஐ.தே க. பொதுச் செயலாளர் டாக்டர் காமினி விஜயசேகராவும் கொல்லப்பட்டனர்.

நேற்று அதிகாலை 12. 30 மணியளவில் இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றது

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் காமினி திசாநாயக்காகலந்துகொண்டு பேசிமுடித்துவிட்டு மக்களுக்கு கையசைத்துக் காட்டிய வேளையிலேயேஇக் குண்டு வெடிப்பு நடைபெற்றது.

இக் குண்டு வெடிப்பின் போது மேடையில் இருந்த ஐ.தே.க பிரமுகர்கள் மற்றும் பார்வையாளர்கள், காமினி திசாநாயக்காவின்மெய்ப்பாதுகாவலர்கள் உட்பட பலர் கொல்லப்பட்டனர்- அத்தோடு நூற்றிற்கு மேற்பட்டவர்கள் படுகாயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது

## ஐ.தே க அவசரக் கூட்டம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவரும் ஐ தே.கவின் ஜனாதிபதிவேட்பாளருமான காமினி திசாநாயக்காவின் மரணத்தினால் ஏற்பட்டிருக்கும் நிலைமை பற்றியும், வருங்கால அரசியல் நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்வதற்காக ஐ தே. கவின் நிர்வாகக் குழுவின் அவசரக் கூட்டம் இன்று மாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

கட்சித் தலைவரும் ஜனா (6ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைப் படையாளி பெண் என தகவல்

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவை குண்டு மூலம் தாக்கிக் கொன்ற தற்கொலைப்படையாளி பெண் என பொலிஸ் அதிகாரி ஒருவர் தமக்கு கூறிதாக காமினியின் மைத்துனர் தகவல் வெளியிட்டுள்ளார்.

இப்பெண்ணின் சில பாகங்கள் மீட்கப்பட்டுள்ளதாகவும் கால் பகுதி ஒன்றும் கையின் பகுதி ஒன்றும் கண்டெடுக்கப் பட்டுள்ளதாக பிரதி பொலிஸ்மா அதிபர் தமக்கு கூறியதாக காமினியின் மைத்துனரான விக்கிரம வீரசூரிய தெரிவித்தார்.

### மாடிவீட்டின் கூரையில் இருந்த

## பெண்ணின் மண்டையோடு கிராம சேவையாளரினது

(கொழும்பு)

நீண்ட கூந்தலுடன் மாடிக் கட்டடம் ஒன்றில் மீட்கப்பட்ட பெண்ணின் மண்டையோடு ஒரு பெண் கிராம சேவகருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

முன்னதாக இம் மண்டையோடு தற்கொலைப் படை பெண்ணின் தலை என பொலிசாரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## 56 பேரின் மரணங்கள் ஊர்ஜிதம்

(கொழும்பு)

நேற்று அதிகாலை கொழும்பு பாலத்துறையில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவதில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 56க்கும் மேற்பட்டது என பொலிசார் தெரிவித்துள்ளனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

பாலத்துறைச் சந்தைக்கருகில் நடந்த ஐ தே. க பிரசாரக் கூட்டத்தில் நடந்த இக்குண்டு வெடிப்பில் காயமடைந்த 75க்கும் அதிகமானோர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.



## கண்டு பிடிக்கப்பட்ட தலை பகுப்பாய்வு செய்யப்படுகிறது

கொழும்பில் குண்டு வெடிப்பு இடம் பெற்ற இடத்தில் துண்டிக்கப்பட்ட தலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அது ஆணின் தலையா, பெண்ணின் தலையா என விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்...

## 5 பொலிஸ் உயர் அதிகாரிகள் உட்பட பல பொலிசார் பலி

(கொழும்பு)

... தாக பொலிஸ் மா அதிபர் ... ளார். இன்னும் அடையாளம் ...

(6ஆம் பக்கம் பார்க்க)

# 56 பேரின் மரணங்கள் ஊர்ஜிதம்

(கொழும்பு)

நேற்று அதிகாலை கொழும்பு பாலத்துறையில் நடந்த குண்டு வெடிப்புச் சம்பவத்தில் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 56க்கும் மேற்பட்டது என பொலிசார் தெரிவித்துள்ளனர். நூற்றுக்கும் அதிகமானோர் காயமடைந்துள்ளனர்.

பாலத்துறைச் சந்தைக்கருகில் நடந்த ஐ.தே.க பிரசாரக் கூட்டத்தில் நடந்த இக்குண்டு வெடிப்பில் காயமடைந்த 75க்கும் அதிகமானோர் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

# 5 பொலிஸ் உயர் அதிகாரிகள் உட்பட பல பொலிசார் பலி

(கொழும்பு)

நேற்று நடைபெற்ற குண்டு வெடிப்புச் சம்பவத்தில் ஒரு சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி உட்பட ஐந்து பொலிஸ் உயர் அதிகாரிகள் கொல்லப்பட்டதாக பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை சாதாரண மற்றும் ரிஷேவ் பொலிசார் சிலர் மரணம் அடைந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இன்னும் அடையாளம் காணப்படாத நிலையில் சடலங்கள் இருப்பதால் சரியான முடிவை பெறமுடியாது உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்

# தற்கொலைப் படையாளியே கொலைகளுக்குக் காரணமாம்

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவும் ஏனைய 56 பேரும் கொல்லப்படக் காரணமான குண்டு வெடிப்பிற்கு தற்கொலைப் படையாளியே காரணம் என கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்கொலை படையை சேர்ந்த ஒருவரால் மேற்கொள்ளப்பட்ட இந்த குண்டு வெடிப்பு தாக்குதலினால் பிரசார மேடை முன் பக்கம் நாசமடைந்துள்ளது என்றும் மேடைக்குமிகவும்நெருக்கமாக சென்றதாலேயே இத்தகைய

(6ஆம் பக்கம் பார்க்க)



# தேசத்துரோகிகள் நால்வர் மீது விசாரணை பூர்த்தி உளவாளிகள் பற்றி விழிப்புடன் இருக்க கோரிக்கை


1993, 1994 ஆம் ஆண்டுகளின் காலப்பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தின் உளவாளிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி தேசத்துரோகம் புரிந்த நால்வர் பற்றிய விபரங்களை தமிழீழ விடுதலைப் புலிகள் வெளியிட்டுள்ளனர். துரோகத்தனங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக மக்கள் விழிப்பாக இருக்கவேண்டும் எனவும் அவர்கள் கேட்டுள்ளனர்.

★ நடராசா சந்திரகுமார்/சின்னராசா (வயது 25 வியாபாரம், சொந்த இடம் பலாலி, ஸ்கந்தபுரம், கிளிநொச்சி)

★ சிவப்பிரகாசம் செல்வராசா (வயது 30, வியாபாரம், 3ஆம் வட்டாரம், முள்ளியவளை)

★ வடிவேல் அல்பிறட்


( 5 ஆம் பக்கம் பார்க்க)



நடராசா சந்திரகுமார் (சின்னராசா)



சிவப்பிரகாசம் செல்வராசா



வடிவேல் அல்பிறட்



பசுபதி யோகராசா

## அடுத்த வேட்பாளர் யார்

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலுக்கு ஐக்கிய தேசியக் கட்சிசார்பில போட்டியிடுவதற்கு ஜனாதிபதி டி.பி. விஜேதுங்க, ரணில் விக்கிரமசிங்கா மற்றும் மறைந்த காமினியின் மனைவியான சிறிமா திசாநாயக்கா ஆகியோரது

(6ஆம் பக்கம் பார்க்க)

## சனியன்று இறுதிக்கிரியை

குண்டுவெடிப்பில் கொல்லப்பட்ட காமினி திசாநாயக்காவின் இறுதிச் சடங்குகள் பூரண அரச மரியாதைகளுடன் 29-ம் திகதி சனிக்கிழமை மலை 4 மணிக்கு சுதந்திர சதுக்கத்தில் நடைபெறவுள்ளது.

பிரதமர் சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்புரைக்கு அமைய அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இறுதிச்சடங்குகள் பற்றிய ஒழுங்குகளைச் செய்வதற்கு அரசாங்கத்தின் சார்பில் தகவல் சுற்றுலா போக்குவரத்து அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க நியமிக்கப்பட்டுள்ளார்.

## கிராம சேவையாளரினது

(கொழும்பு)

நீண்ட கூந்தலுடன் மாடிக் கட்டடம் ஒன்றில் மீட்கப்பட்ட பெண்ணின் மண்டையோடு ஒரு பெண் கிராம சேவகருடையது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

முன்னதாக இம் மண்டையோடு தற்கொலைப் படை பெண்ணின் தலை என பொலிசாரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

## கண்டு பிடிக்கப்பட்ட தலை பகுப்பாய்வு செய்யப்படுகிறது

கொழும்பில் குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தில் துண்டிக்கப்பட்ட தலை ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. அது ஆணின் தலையா, பெண்ணின் தலையா என விஞ்ஞான ரீதியில் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவித்தன

குண்டு வெடிப்பு பகுதியில் இருந்து ''டெனிம்'' காற்சட்டைத் துண்டுகளும் வேறும் பல தடயங்களும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவிக்கின்றனர் நேற்று அதிகாலை குண்டு வெடிப்பு இடம்பெற்ற இடத்தின் மையப்பகுதியில் இத்தடயங்கள் கிடைத்ததாக அவர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்

## காமினி திசாநாயக்காவிற்கு நேரில் சந்திரிகா அஞ்சலி

காமினி திசாநாயக்கா உட்பட நேற்று அதிகாலை கொல்லப்பட்ட ஏனைய ஐக்கிய தேசியக் கட்சி பிரமுகர்களின் உடல்கள் நேற்று மாலையிலிருந்து அவர்களது இல்லங்களில் வைக்கப்பட்டிருந்தன.

நேற்று மாலை பிரதமர் சந்திரிகா குமாரதுங்காவும், அமைச்சர்களும், பெருந்தொகையான பாராளுமன்ற உறுப்பினர்களும் காமினி திசாநாயக்காவின் உடல் வைக்கப்பட்டிருந்த அவரது உத்தியோகபூர்வ இல்லத்துக்கு சென்று இறுதி அஞ்சலி செலுத்தினர்.

# பேச்சுவார்த்தை ஒத்திவைப்பு

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா கொல்லப்பட்டதை தொடர்ந்து, விடுதலைப் புலிகளுக்கும் அரசாங்க பிரதிநிதிகளுக்கும் நேற்று யாழ்ப்பாணத்தில் ஆரம்பமாகவிருந்த இரண்டாம் கட்டப்பேச்சுக்கள் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்க மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது உலங்குவானூர்தி மூலம் நேற்றுக் காலை பேச்சுக்களில் கலந்து கொள்ள, அரசாங்க தரப்பு பிரதிநிதிகள் யாழ்வருவர்என அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே எனினும், ஒத்திவைக்கப்பட்ட பேச்சுக்கள், மீண்டும் ஆரம்பமாகும் திகதிகள் பற்றிய எவ்வித தகவல்களையும் அரசாங்க வட்டாரங்கள் தெரிவிக்கவில்லை.

## பேச்சுக்கள் ஒத்திவைப்பிற்கு சூழ்நிலையே காரணம்

### லயனல் பெர்னாண்டோ தெரிவிப்பு

(கொழும்பு)

விடுதலைப் புலிகளுடனான அரச தரப்பு குழு நடத்த இருந்த இரண்டாம் சுற்று சமாதானப்பேச்சு ஒத்திவைக்கப்பட்டமைக்கு தற்போதைய சூழ்நிலை உகந்ததாக இல்லாமையே காரணம் என தகவல்துறை அமைச்சின் செயலரும் அரச தரப்புக் குழுவின் அங்கத்தவருமான லயனல்

(6ஆம் பக்கம் பார்க்க)

# வரி விளம்பரம்

### விற்பனைக்கு

ஒரு கிழமை வளர்ச்சியடைந்த பிரிமா புறொயிலர் குஞ்சுகளும், பிரிமா சிவப்பு பேட்டுக் குஞ்சுகளும் நன்கு உக்கிய கோழி எருவும் விற்பனைக்குண்டு தொடர்பு:- சி. குலசிங்கம் 9, நக்கா வீதி, (BAR க்கு முன்பாக) யாழ்ப்பாணம் (6173)

### பாலர் ஆசிரியராகலாம்

கடைசித் தகைமை க'பொ.த (சா/த) சனி ஞாயிறு வரமுடியாதோர் தபால் வழியிலும் பயிலலாம். விரைவில் பதிக; பாலர் ஆசிரியர் சங்கம், உயர் கலைக் கல்லூரி ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். (6175)

### மில்க்வைற் சலவைத்தூள்

சீருடைகளுக்கும், அன்றாட ஆணிகளுக்கும் பளிச்சிடும் வெண்மையைத்தருவது மில்க்வைற் சலவைத்தூள் துரித சலவைக்கு ஏற்றது. வெற்றுப் பக்கற் 25க்கு ஒரு அப்பியாசக் கொப்பி. 100க்கு ஒரு கவர்ச்சியான கைலேஞ்சி வழங்கப்படும்; ''மில்க்வைற்'' (சி-10574)

### வியாழ மாற்றம்

எங்கும் விற்பனையாகிறது உங்கள் எதிர்காலம் பற்றி அறிய, ஜாதகம் எழுத, அதிர்ஷ்ட எண்களில் பெயரமைக்க, விவாகப் பொருத்தம் பார்க்க வேலணை சோதிடர் V A: சிவராசா 152 B, அரசடி வீதி, கந்தர்மடம் (6187)

### சந்தேசிய நிருபருக்கு விருது

(கொழும்பு)

சிறந்த வானொலி பிரமுகர் என்ற விருதை பி.பி.ஸியின் சந்தேசிய சிங்கள சேவையின் கொழும்பு செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ பெற்றுள்ளார் கொழும்பு ரவர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற தொடர்பு துறையினர் விருது வழங்கல்

### சுயமுயற்சிக்கடன்

சங்கானை வட்டப்பிரிவைச் சார்ந்த கிராமிய உற்பத்திக் குழுக்களின் ஊடாக தேர்ந்தெடுக்கப்பட்ட விவசாயிகள், சிறுதொழில் முயற்சியில் ஈடுபடுவோர் போன்ற 29 பேர்களுக்கு தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் சுய முயற்சிக் கடனுதவிகள் வழங்கப்பட்டன,

கடந்த 21 ஆம் திகதி சித்தன்கேணி பிள்ளையார் கோவில் வீதியிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்க மண்டபத்தில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவன சங்கானை வட்டத் தொடர்பாளர் தலைமையில் இடம்பெற்ற மேற்படி கடனுதவி வழங்கல் நிகழ்வில் மேற்குறித்த பயனாளிகளுக்கு தலா பத்தாயிரம் ரூபாய் விகிதம் சுயமுயற்சிக் கடன் வழங்கப்பட்டது; (41)

# இது தான் தர்மம் என்று எவரும் எல்லை போட முடியாது

## பாரதக்கதைவெளியீட்டு விழாவில்புதுவைஇரத்தினதுரை

(யாழ்ப்பாணம்)

தர்மத்திற்குஎவரும் எல்லை போட முடியாது: இதுதான் தர்மம் என எவரும் வரையறுக்கவும் முடியாது: உயிர்ப்பலி தர்மம்அல்ல என்றுசொல்வது பிழை எதிரியின் பலத்தை அழிப்பதற்கு நாம் உயிராயுதத்தையே பயன்படுத்துகின்றோம்.

நாவலர் கலாசார மண்டபத்தில் ஞாயிறு காலை நடைபெற்ற வரதரின் பாரதக்கதை நூல் வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டு பேசும் போது கலை பண்பாட்டுக்கழகப் பொறுப்பாளர் திரு; புதுவை இரத்தினதுரை மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசும் போது,

வரதர் ஐயா அறியப்பட்ட எழுத்தாளர். மறுமலர்ச்சியை உருவாக்கியவர். பத்திரிகைத்துறை வரலாற்றில் சுவடு பதித்தவர். எமது மூத்த எழுத்தாளர் இவர் வியாசரின் பாரதக் கதைக்கு ஏன் இன்னொரு வடிவம் கொடுக்க விரும்பினார் என்று புரியவில்லை.

தர்மத்திற்கு எவரும்எல்லை போட முடியாது: அது மாற்றமடையக் கூடும்,

ஒரு ஆக்கத் திறமையுடன் தான் ஆக்க இலக்கியத்தை இன்னொரு ஆக்க இலக்கியக்காரன் பார்க்கமுடியும்: இந்த நூலை வரதர் காலத்தின் தேவைக்காக எழுதினார் என்பதில் எனக்கு நம்பிக்கை இல்லை:

நாம் புதிய செல் நெறியில் செல்கின்றோம்; எமது நகர்வு சரியானது என்ற நம்பிக்கை எமக்கு உண்டு;

பாரதக் கதையை வாசித்த பாரதி பாஞ்சாலியை இழுத்த சம்பவத்தைக் கண்டு கொதித்தான்: அவனுக்கு அது பிடிக்கவில்லை. அது காலத்திற்கு தேவையானது; அதுவே பாஞ்சாலி சபதம்.

இன்றைய இந்த வெளியீடு காலத்திற்குப் பொருந்தாது என்றே சொல்வேன். அடைமழையில் ஐஸ்கிறீம் குடிக்க முடியாது. கேநீர் கால் தேவை;

பாரதத்தையும், இராமாயணத்தையும்எவரும் வாசிக்காமல் இருக்க முடியாது: என்பதில் நான் ஒத்த கருத்துக் கொண்டவன். ஆனால் இன்றையதேவைஇதுவல்ல: எமது போராட்ட கதைஇலக்கியமாகப் படைக்கப்பட வேண்டும்- இந்த மூத்த எழுத்தாளரிடம் இதைத்தான் நாம் எதிர்பார்க்கின்றோம்:

கோயில்களில் நடைபெறும் சொற்பொழிவுகளில் கருத்துக்கள் திரிபுபடுத்தப்படுகின்றன. சொற்பொழிவாளர்கள் கருத்துத்திரிவு பற்றி யோசிக்காமல் பேசிவிட்டு பணம் பெற்றுக் கொண்டு போய்விடுகிறார்கள்-

ஏதோ ஒருஅலுவலாகசமீபத்தில் கோயில் பக்கம் செல்ல நேரிட்டது: அங்கு புஸ்பா தங்கத்துரையின் கதையைப் போல மதச் சொற்பொழிவு நடைபெறுவதை அவதானித்தேன். இது தவிர்க்கப்பட வேண்டும்.

மாணவப் பருவத்தில் பரீட்சைக்காக நான் பாரதக்கதையைப் படித்துள்ளேன்; அதன் பின்னர் இந்த நூலை வாசிக்க வேண்டிய நிர்ப்பந்தம் எனக்கு நேற்று ஏற்பட்டது:

இந்த நூலாசிரியரின் சொந்த ஊரான பொன்னாலைக்கு இப்போது செல்ல முடியுமா? இதை எழுதுங்கள்;

வரதர் எழுதிய 'தீ வாத்தியார்' எங்கே? அதைநூலாகத் தந்திருந்தால் சந்தோஷப்பட்டிருப்பேன் என்றார். (தி பா)

## ஓராண்டு நினைவஞ்சலி

திருமதி
வைத்திலிங்கம் அன்னபூரணம்

பழலையாய் அன்று 10-06-1928
தெய்வமாய் இன்று 03-11-1993

திதி:- 25-10 1994

அன்பு எனும் சோறூட்டி
பண்பு எனும் ஆடைகட்டி
பணிவு எனும் தேரிலேற்றி
பார் போற்ற வைத்திட்ட - எம்
பாசமிகு அம்மம்மாவே - நீங்கள்
பாருலகம் விடுத்தின்று
இறை நிழலில் இருந்தெங்கள்
பாதைக்கு ஒளியூட்டி - இந்த
பாவைகளை காத்திடுங்கள்;

உம் நினைவில் வாடும்
பேரப்பிள்ளைகள்
T. நாகநந்தினி (ஈழநாதம்)
T. தனலட்சுமி (போராளி)

207, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்; (சி-10577)

## தவறிவிட்டது

திரு: துரைராஜா குமார் என்பவருடைய மூன்று தங்கச்சங்கிலியும், இரண்டு பென்ரனும், ஒன்று பெயர் பதித்தது, என்பன அல்லிப்பளையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணிமனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

## 9-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு
25-11-1958

வீரச்சாவு
25-10-1985

2-ம் லெப். ஜீவன் (குதிரைவீரன்)

## 31-வது நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டிக் கிரியையும்



தோற்றம்
19-06-1920

மறைவு
25-09-1994

### அமரர் ஆழ்வாப்பிள்ளை பர்வதம்

அன்பின் திருவருளால் பண்பின்
உறைவிடமாய் பாசத்தின் பிறப்பிடமாய்
கடமையின் இருப்பிடமாய் தீரா
வினைகளைப் போக்கும் அம்மாவாய்
மாதா குலத்திற்கு எடுத்துக்காட்டாய்
இருந்து திடீரென எம்மை ஆறாத்துயரில்
மூழ்க வைத்து மீளாத்துயில் கொண்ட
எங்கள் அன்பு அம்மாவே உங்கள்
ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்தித்து
நிற்கும்

''பார்வதி பவனம்''
வதிரி

மக்கள். மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
சகோதர, சகோதரிகள்,
மைத்துன, மைத்துனிமார்
மாமியார், உற்றார் உறவினர்கள்

(6185)

## நினைவு கூருகின்றோம்...

### 25. 10. 1994

1985-ம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா - ஓமந்தை, கொக்குவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய

**கப்டன் லோறன்ஸ்** (மருதலிங்கம் சிவலிங்கம்- கொக்குத்தொடுவாய் - மணலாறு)

**லெப். சபா** (கந்தையா சிவமூர்த்தி - கொக்குத் தொடுவாய்-மணலாறு)

**2-ம் லெப். லலித்** (நடேசு ராஜேந்திரன்-முள்ளியவளை-முல்லைத்தீவு)

**2-லெப். ஜீவன் குதிரைவீரன்** (தம்பிஐயா இரத்தினசாமி-வெற்றிலைக்கேணி யாழ்)

1987-ம் ஆண்டு யாழ். கரவெட்டிப் பகுதியில் இந்தியப் படையினருடனானசமரில் வீரச்சாவெய்திய

**கமல்** (செல்லக்குட்டி இளங்கோ - குமுழமுனை மணலாறு)

யாழ் மல்லாகத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட வர்த்தகசங்கத் தலைவரும், நாட்டுப் பற்றாளருமான

பார்சிக வேலனை சோதிடர் V A. சிவராசா 152 B, அரசடி வீதி, சுந்தர் மடம் (6187)

## சந்தேசிய நிருபருக்கு விருது

(கொழும்பு)

சிறந்த வானொலி பிரமுகர் என்ற விருதை பி.பி.ஸியின் சந்தேசிய சிங்கள சேவையின் கொழும்பு செய்தியாளர் எல்மோ பெர்னாண்டோ பெற்றுள்ளார் கொழும்பு ரவர் மண்டபத்தில் அண்மையில் நடைபெற்ற தொடர்பு துறையினர் விருது வழங்கல் நிகழ்வில் அவருக்கு இவ்விருது வழங்கப்பட்டது தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா இதற்கு தலைமை தாங்கினார்;

---

பாலவைகளை காத்திடுங்கள்;

உம் நினைவில் வாடும்
பேரப்பிள்ளைகள்
T. நாகநந்தினி (ஈழநாதம்)
T. தனலட்சுமி (போராளி)

207, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்; (சி-10577)

---

## தவறிவிட்டது

திரு. துரைராஜா குமார் என்பவருடைய மூன்று தங்கச்சங்கிலியும், இரண்டு பென்ரனும், ஒன்று பெயர் பதித்தது, என்பன அளிப்பளையில் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் பணி மனையில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்;

து: குமார்
சங்குவேலி தெற்கு,
மானிப்பாய். (6182)

---

உ
சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் மங்களகரமான பவ வருஷம் ஐப்பசித் திங்கள் 14-ம் நாள் (30-10-1994) ஞாயிற்றுக்கிழமை இரவு 7. 42 மணி முதல் 8. 54 மணி வரையுள்ள உத்தர நட்சத்திரமும் துவாதசி திதியும், பவ கரணமும் சித்தயோகமும் கூடிய மிதுன லக்கின சுபமுகூர்த்த நல்வேளையில்,

| | |
|---|---|
| திரு . திருமதி செல்லத்துரை தம்பதிகளின் | திரு: இராசரத்தினம் அவர்களின் |
| கனிஷ்ட புத்திரன் | கனிஷ்ட புத்திரி |
| திருநிறைச் செல்வன் | திருநிறைச் செல்வி |
| **ஸ்ரீஸ்ரங்கராசா** | **குசலலோஜினி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

பரிசுத்த தேவாலய கல்யாண மண்டபத்தில் இறைவன் திருவருள் துணை கொண்டு திருமணம் நடாத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம் தங்கள் நல்வரவை நாடும்,

| | |
|---|---|
| திரு . திருமதி க. செல்லத்துரை | திரு சி. இராசரத்தினம் |
| ''அன்னை இல்லம்'' | 136, திருநகர், |
| உடுத்துறை தெற்கு, | கிளிநொச்சி, |
| செம்பியன்பற்று, | இலங்கை; |
| இலங்கை. | |
| **Mr. & Mrs K. SELVADURAI** | **Mr. & Mrs S. SRIRAVINDRARAJA** |
| 1577, Lawrence Ave, West 1125 | Unit 2, 451 St. Patrick Street |
| North York, Ontario M6 L1 IC4 | Ottawa, Ontario KIN SL2 |
| Canada | Canada |
| Tel. (416) 235 - 2870 | Tel. (613) 789 - 4978 |

(இரு வீட்டார் அழைப்பு)

தகவல்: திருமதி K: புவனலோஜினி
கைதடி.

(6786)

---



பிறப்பு
25-11-1958

வீரச்சாவு
25-10-1985

## 2-ம் லெப். ஜீவன் (குதிரைவீரன்)

(தம்பிஐயா இரட்ணசாமி)
வெற்றிலைக்கேணி முள்ளியான்

வன்னி மண்ணை காத்திடவே வீரவேங்கை
-சென்றிட்டான்
சிங்களக் குடியேற்றமதைத் துரத்தி நின்றான்
- வீரவேங்கை ஜீவனவன்
கொக்கிளாய் முகாம் தகர்ப்பில் வீரமதைக் காட்டி
-நின்றான்
என்பதனைத் தமிழ் ஈழமதில் வளர்த்து விட்டான்
காலமகள் அரவணைக்க வந்து நின்றான் வன்னி
- மண்ணில்
அதைக் கரிலனவன் புரிந்து கொண்டான் அவனை
எடுத்திடவே
அராஜகா சிங்களவன் உருவினிலே வந்து நின்ற
சிங்களவன்
பதுங்கி இருந்து தாக்கிடவே பறந்ததுவே அவனின்
உயிர்
வன்னி மண்ணும் உதிர்த்ததுவோ கண்ணீர் வெள்ளம்
மாவீரனவன் ஜீவன் உடல் துவண்ட செய்தி கேட்டு
அங்கு, உனது உயிர் ஒன்பதாண்டு போனதடா தமிழ்
ஈழமண்ணை விட்டு, ஆனாலும் எழுந்து நிற்கும்
உனது
புகழ் மங்கிடா, தமிழன் நெஞ்சமதில்.

இவருடன் வீரச்சாவடைந்த லோறன்ஸ், சபா, லலித் ஆகியோருக்கும் எமது வீரவணக்கத்தை செலுத்துகின்றோம்;

பருத்தித்துறை (6189) குடும்பத்தினர்

---

# நன்றி நவில்கின்றோம்

எமது 'மருத்துவம்' ஆரம்ப மருந்தாளருக்கான சான்றிதழ் வழங்கல் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்த அனைத்து துறைசார் நிபுணர்களுக்கும் தமிழீழ விடுதலைப் புலிகள் அரசியல் துறையினருக்கும், வைத்திய கலாநிதி அவர்களுக்கும், பேராசிரியர்களுக்கும், வணிகப் பெருமக்களுக்கும், யாழ் மாவட்ட வணிக கழகங்களுக்கும், யாழ் இந்துக்கல்லூரி அதிபர் - பிரதி அதிபர் அவர்களுக்கும், மற்றும் பொதுமக்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்;

க. மு. பத்மநாதன் (செயலாளர்)

வட பிராந்திய யாழ்
ஆங்கில மருந்து வணிகர் மன்றம்

(சி-10575)

---

1985-ம் ஆண்டு இதேதினத்தில் வவுனியா - ஓமந்தை, கொக்குவெளிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் வீரச்சாவெய்திய

**கப்டன் லோறன்ஸ்** (மருதலிங்கம் சிவலிங்கம்- கொக்குத்தொடுவாய் - மணலாறு)

**லெப். சபா** (கந்தையா சிவமூர்த்தி - கொக்குத்தொடுவாய்-மணலாறு)

**2-ம் லெப். லலித்** (நடேசு ராஜேந்திரன்-முள்ளியவளை-முல்லைத்தீவு)

**2-லெப். ஜீவன் குதிரைவீரன்** (தம்பிஐயா இரத்தினசாமி-வெற்றிலைக்கேணி யாழ்)

1987-ம் ஆண்டு யாழ். கரவெட்டிப் பகுதியில் இந்தியப் படையினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**கமல்** (செல்லக்குட்டி இளங்கோ - குமுழமுனை மணலாறு)

யாழ் மல்லாகத்தில் தேசவிரோதிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட வர்த்தகசங்கத் தலைவரும், நாட்டுப் பற்றாளருமான

**சிவசிதம்பரப்பிள்ளை சிவ்ராசபிள்ளை** (தீசன்வீதி, மல்லாகம்-யாழ்)

1990-ம் ஆண்டு பலாலி முகாமைச் சூழ்ந்த பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**திலீப்** (அப்புக்குட்டி வரதன்-ஊரெழு வடக்கு-சுன்னாகம்)

**வெற்றி** (சோமசுந்தரம் சுபாகரன்-ஐயனார்கோவிலடி, சுழிபுரம்-யாழ்)

**சேரன்** (பெருமாள் நாகேந்திரம்-இன்பம்வீதியாழ்)

மாவிட்டபுரத்தில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய,

**மகான்** (இராசதுரை சுதாகரன் - பூதர்மடத்தடி கோப்பாய் வடக்கு-யாழ்)

1991-ம் ஆண்டு மட்டு-மண்முனைசோலைப் பகுதியில் ரோந்துசென்ற சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய

**லெப். ராம்ஜி** (கி. மோகன்ராஜ் - பிள்ளையாரடி-மட்டு)

**தவநாதன்** (த. மகேந்திரன் - கொத்தியாவளை மட்டு)

மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் விழுப்புண்ணடைந்திருந்து சிகிச்சையின் போது வைத்தியமனையில் வீரச்சாவெய்திய

**லெப், சித்தாத்தன்** (சிறிகந்தராசா சிறிதரன் திருவையாறு-கிளிநொச்சி)

1992-ம் ஆண்டு யாழ்.வைத்தியசாலையில் சுகயீனம் காரணமாக எமைப் பிரிந்த

**2-ம் லெப்.யோகவதி** (ஜெயராஜா யூடிற்றஜனி-கரவெட்டி மேற்கு-யாழ்)

1993-ம் ஆண்டு மட்டு-அம்பாறையில் ஆற்றைக் கடக்கும் போது முதலைபிடித்ததில் எமைப் பிரிந்த

**தமிழ்வேந்தன்-ரவீந்திரகுமார்** (மாணிக்கன் ரவிச்சந்திரன்-மன்னம்பிட்டி-மட்டு)

இதேதினம் தமிழீழ எல்லைக்குட்பட்ட பிரதேசத்திலும் கடற்பரப்பிலும் சிறிலங்காப் படையினராலும் இந்தியப் படையினராலும் தேசவிரோதிகளாலும் கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமக்கள்

**ஆகியோரை இந்நாளில்**
**நினைவு கூருகின்றோம்**

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி-10573)

# காமினி திசாநாயக்கா; வாழ்க்கைக் குறிப்புக்கள்

★ 1942 மார்ச் 20 ஆம் திகதி பிறந்தார்.

★ 1990 அமைச்சரவை மாற்றம் வரை பிரேமதாசா அரசில் பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சராக இருந்தார் 1977 ஜே. ஆர். ஜெயவர்த்தனா அமைச்சரவையில் முன்னதாக மகாவலி, காணி, காணி அபிவிருத்தி அமைச்சராக இருந்தார்.

★ 1977 தேர்தலில் நுவரெலிய - மஸ்கெலியா தொகுதியின் முதல் எம்.பியாக தெரிவானார்.

★ 1970 மேயில் தனது 28 வயதில் காமினி முதன்முதலாக பாராளுமன்றம் நுழைந்தார் அப்போது அவரே வயதில் இளைய எம். பியாக இருந்தார்.

★ கண்டி ட்ரினிற்றி கல்லூரியில் கல்வி கற்ற இவர் ஆரம்பத்தில் சட்டத்தரணியாக பணியாற்றினார். இவரின் தந்தையார் அன்ரூ திஸ்ஸநாயக்கா 1956 - 1959 ஆண்டு காலப் பகுதியில் சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் நுவரெலியா எம்.பியாக விளங்கினார்.

★ 1989 இல் ஆர் பிரேமதாசா ஜனாதிபதியான பின், 1991 இல் அத்துலத் முதலியுடன் ஐக்கிய தேசியக் கட்சியை விட்டு வெளியேறி. ஜனநாய ஐக்கிய தேசிய முன்னணியை அமைத்தார்.

★ ஆர். பிரேமதாசா, 1993ன் மேயில் கொல்லப்பட்ட பின், மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியில் இவர் இணைந்து கொண்டார்.

★ 1994 இல் பொதுத் தேர்தலில் ஐ. தே. க. தோல்வியடைந்தபின் பிரதமராயிருந்த ரணில் விக்கிரமசிங்காவுடன் போட்டியிட்டு எதிர்க்கட்சி தலைவராக தெரிவானார்.

★ இந்திய - இலங்கை ஒப்பந்தம் உருவாவதற்கு முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர் ஜெயவர்த்தனாவுடன் மிகத் தீவிரமாக ஒத்துழைத்த இவர், இறுதிவரை இந்தியாவின் அனுதாபியாகவே இருந்தார்.

★ மத்திய மாகாண சபையில் எதிர்க்கட்சித் தலைவராக ஜனநாயக ஐக்கிய முன்னணியை பிரதிநிதித்துவம் செய்த காமினி அப்போது அம்மாகாணசபையின் முதலமைச்சராக இருந்த எச். பி திசாநாயக்காவிற்கு எதிராக நம்பிக்கையில்லா பிரேரணை கொண்டுவர முயன்றபோது அதனால் இ.தொ.காவின் தொண்டமானிற்கும் செல்லச்சாமிக்கும் இடையில் முரண்பாடு ஏற்பட்டது.

★ மகாவலி அபிவிருத்தித் திட்டத்தில் பெரும் நிதிமோசடியில் ஈடுபட்டதாக இவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது ஆசியாவின் குறிப்பிடத்தக்க செல்வந்தர்களில் இவரும் ஒருவர்

## காமினி விஜேசேகர பற்றிய குறிப்புகள் சில

★ 1977 இல் ஐ. தே க சார்பில் போட்டியிட்டு எம்.பியானார்.

★ ருக்மன் சேனநாயக்காவின் ஐக்கிய ஜனநாயக முன்னணியுடன் சேர்ந்து டட்லி பெரமுன எனும ஓர் அமைப்பை உருவாக்கியதையடுத்து இவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் வெளியேற்றப்பட்டார் இதைத் தொடர்ந்து இவர் காமினி திசாநாயக்காவிற்கு எதிராக மகாவலி திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஊழல்களை பத்திரிகைகளுக்கு வெளியிட்டார்.

# காமினியின் கொலைக்கு பிரதமர்சந்திரிகாகண்டனம்

(கொழும்பு)

காமினி திசாநாயக்கா குண்டு வெடிப்பு ஒன்றில் கொல்லப்பட்டமைஒரு காட்டுமிராண்டித்தனமான செயலாகும். இதை எனது அரசு கண்டிப்பதுடன் ஆழ்ந்த கவலையும் தெரிவித்துக் கொள்கிறது என காமினி திசாநாயக்காவின் மரணம் குறித்து பிரதமர் சந்திரிகா குமாரதுங்க விடுத்த அனுதாபச் செய்தியில் தெரிவித்துள்ளார்

இந்நாட்டிலிருந்து அரசியல் வன்செயல்கள் அனைத்தையும் ஒழித்துக்கட்டி அரசியலில் ஜனநாயக கோட்பாடுகளுக்கும் உயர் விழுமியங்களுக்குமுக்கியத்துவம் அளிக்க அரசு நடவடிக்கை எடுத்து வரும் இவ்வேளையில் இப்படியான ஒரு தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது மிக வேதனைக்குரியது.

திருமதி திசாநாயக்காவிற்கும் அவரது பிள்ளைகளுக்கும் உயிரிழந்த ஏனையோரின் குடும்பங்களுக்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கிறேன்.

எனது அன்புக்குரிய மிகவும் நெருங்கிய இரண்டு பேர் படுகொலை செய்யப்பட்ட வேளையில் தாங்க முடியாத துயரம் கொண்ட அனுபவம் எனக்குண்டு. எனவே தமது அன்புக்குரியவர்களை பறிகொடுத்துள்ளவர்களுக்கு ஏற்பட்டுள்ள துயரத்தை என்னால் நன்கு உணர முடியும்.

தற்போதைய நிலையில் நாட்டு மக்கள் சகிப்புத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். அமைதியையும் ஒழுங்கையும் பேணவேண்டும்.

இச்சம்பவத்தின் பின்னணி பற்றி அறிய அரசு துரித நடவடிக்கை எடுக்கும். குற்றவாளிகள் யாராகஇருப்பினும் பாரபட்சம் அற்ற முறையில் நியாயத்தின் முன் கொண்டு வரப்பட்டு தண்டிக்கப்படுவர் என பிரதமர் தமது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

# கலவரம் வெடிக்கலாமென கொழும்பில் தமிழர் அச்சம்

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்காவும், ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கிய பிரமுகர்களும் நேற்று அதிகாலை குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து, கொழும்பில் தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தப்படலாம் என அச்சம் எழுந்துள்ளதாக அங்கிருந்து எமக்கு கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

கொழும்பின் பிரதான வீதிகள் அனைத்திலும் இராணுவமும் கடற்படையும் காவல் பொறுப்பை ஏற்றுள்ளதாகவும். கலவரம் எழக்கூடிய பகுதிகள் என கணிக்கப்படும் பகுதிகளில் தீவிர கண்காணிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

# உடனடியாகக் கூடிய அமைச்சரவை

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவும் மற்றும் பலரும் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து பிரதமமந்திரி சந்திரிகா தலைமையில் அமைச்சரவைக் கூட்டம் நடைபெற்றது.

இதனைத் தொடர்ந்து அண்மையில், வடக்கு- கிழக்கைத் தவிர ஏனைய பகுதிகளில் நீக்கப்பட்டிருந்த அவசரகாலச்சட்டம்நேற்று மீண்டும் நாடளாவியரீதியில் அமுலாக்கப்பட்டுள்ளது.

காமினி திசாநாயக்காவின் கொலையைத் தொடர்ந்து வன்முறைச் சம்பவங்கள் இடம் பெறுவதை தடுக்கும் முகமாக அவசரக்காலச் சட்டம் மீளவும் அமுலாக்கப்படுவதாக அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாடுபூராவும் நேற்றுகாலையிலிருந்து ஊரடங்குச் சட்டமும் நடைமுறைக்கு கொண்டுவரப்பட்டது.

# அண்மைக்காலத்தில் காமினி மகிழ்ச்சியாகக் காணப்படவில்லை

## பி. பி. ஸி செய்தியாளர் தெரிவிப்பு

(லண்டன்)

அண்மையில் நான் காமினி திசாநாயக்காவை சந்தித்து பேட்டி கண்டபோது அவர் மகிழ்ச்சியாக காணப்படவில்லை தேர்தல் வெற்றி குறித்து சந்தேகம் கொண்டவராகவே இருந்தார் மகாவலி திட்டத்

எனபி. பி சி, செய்தியாளர் ஜோர்ஜ் ஆரினிதெரிவித்தார்.

1981 இல் யாழ்ப்பாணத்தில் பொது நூலகம் தீயிடப் படுவதற்கு காரணமாக இருந்ததினாலும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு ஆதரவாக இவர் செயற்பட்டமை

ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணையை கொண்டு வந்ததால் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட காமினி பின்னர் பிரேமதாசாவின் மறைவைத் தொடர்ந்து மீண்டும் ஐ. தே கவில் இணைந்தார் இதுகட்சி

## வைத்தியசாலையில் 20 சடலங்கள்

(கொழும்பு)

கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் இதுவரை 20 சடலங்கள் வைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட ஏனைய பலரின் சடலங்கள் அடையாளம் காண முடியாத நிலையில் இருப்பதாகவும், படுகாயமடைந்தவர்களின் இரத்தத்தினால் கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரதான நுழைவாயிலிலிருந்து அவசர சிகிச்சைப் பிரிவுவரை தரை முழுவதும்இரத்தமயமாக இருப்பதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்

படுகாயமடைந்தோரால் கொழும்பு பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவு நிரம்பி வழிவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

## பிரேமச்சந்திரா பற்றிய சில குறிப்புக்கள்

★ 1940 செப்டம்பர் 24 இல் பிறந்தார்

★ குருநாகல் மாளிபதேவா கல்லூரியில் கல்வி கற்றார்.

★ 1983 இல் நெடுஞ்சாலைகள், மீன்பிடித்துறை பிரதி அமைச்சராக நியமிக்கப்பட்டார்

★ 1990 இல் பிரேமதாசா அமைச்சரவையில் தொழில்; தொழிற்பயிற்சி அமைச்சரானார்.

★ 1991 இல் லலித், காமினியுடன் ஐ.தே.க விலிருந்து விலகி ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியில் இணைந்தார்.

★ 1993 இல் நடைபெற்ற மாகாணசபைத் தேர்தலில் வெற்றிபெற்று வடமேல் மாகாணசபையின் முதலமைச்சரானார்,

★ 1994 இல் ஐக்கிய தேசியக் கட்சியில் மீண்டும் இணைந்து பொதுத் தேர்தலில் போட்டியிட்டு, குருநாகல் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரானார்.

## வீரசிங்க மல்லிமாராச்சி வாழ்க்கைக் குறிப்புக்கள்

★ 1933 நவம்பர் 6-ந் திகதி பிறந்தார்.

★ 1962 கொழும்பு மாநகரசபை தேர்தலில் போட்டியிட்டு தோல்வி கண்டு 1965இல் மீண்டும் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

★ 1966 முதல் 1971 வரை ஐ தே க இளைஞர் பிரிவு உதவித் தலைவராக இருந்தார்.

★ 1970இல் கொழும்பு மாநகரசபை பிரதிமேயராக நியமனமானார்.

★ 1974இல் கொலன்னாவ ஐதே க பிரதம அமைப்பாளராக நியமிக்கப்பட்டார்.

★ 1977இல் நடந்த பொதுத்தேர்தலில் கொலன்னாவ தேர்தல் தொகுதியில் வெற்றி பெற்றார்.

★ ஜே.ஆர் ஜெயவர்த்தனாவால் கொழும்பின் மாவட்ட அமைச்சராக நியமிக்கப்பட்டு, பின் 88இல் பெற்றோலிய விநியோக திட்ட அமைச்சரானார்.

★ பிரேமதாசா அரசில் உணவுக் கூட்டுறவுத்துறை அமைச்சராகி. பிரேமதாசாவின் நெருங்கிய அனுதாபியாக விளங்கினார்.

★ காமினி திசாநாயக்காவின் எதிரணியில் இருந்து, கடந்த சில மாதங்களாக அவரது நெருங்கிய ஆதரவாளரானார்.

★ ஹேமா பிரேமதாசாவின் ஐதே க மீள் பிரவேசத்திற்கு வழியாக இருந்தார்.

# காமினி விஜேசேகரா பற்றிய குறிப்புகள் சில

★ 1977 இல் ஐ. தே க சார்பில் போட்டியிட்டு எம்.பி யானார்.

★ ருக்மன் சேனநாயக்காவின் ஐக்கிய ஜனநாயக முன்னணியுடன் சேர்ந்து டட்லி பெரமுன எனும் ஓர் அமைப்பை உருவாக்கியதையடுத்து இவர் ஜே.ஆர். ஜெயவர்த்தனாவால் வெளியேற்றப்பட்டார் இதைத் தொடர்ந்து இவர் காமினி திசாநாயக்காவிற்கு எதிராக மகாவலி திட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட ஊழல்களை பத்திரிகைகளுக்கு வெளியிட்டார்.

★ பிரேமா ஆட்சி காலத்தில் மகாவலி ஊழல் தொடர்பான விசாரணையில் இவர் காமினிக்கு எதிரான முக்கிய சாட்சியாக இருந்தார்,

★ இதனால் அவர் மீண்டும் ஐ.தே.கவினுள் நுழைய வழியமைத்துக் கொண்டார்.

★ ஐ.தே.க. பொதுச்செயலாளராக சிறிசேன கூரேயின் வெளியேற்றத்தை தொடர்ந்து பதவி ஏற்றார்.

★ கடந்த தேர்தலில் எம்.பியாக தெரிவானார்.

# நரோமாவின் பயணம் பாதுகாப்புஅமைச்சால் ரத்து

(யாழ்ப்பாணம்)

இன்று பருத்தித்துறையில் இருந்து பயணிகளை ஏற்றிச் செல்லவிருந்த 'நரோமா'' கப்பலின்பயணம் பாதுகாப்பு அமைச்சினால் ரத்துச்செய்யப்பட்டது.

பருத்தித்துறையில் இருந்து திருமலைக்கு பயணிகளை ஏற்றி இறக்கும் சேவையில் ஈடுபடும் ''நரோமா'' கப்பல் இன்று பருத்தித்துறையில் இருந்து புறப்பட இருந்தது. இந்த பயணம் பாதுகாப்பு அமைச்சினால் ரத்துச்செய்யப்பட்டுள்ளது. பாதுகாப்பு அமைச்சு நேற்று சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் ஊடாக யாழ். செயலகத்திற்கு இவ்வறிவித்தலை அனுப்பிவைத்துள்ளது.

நாடுமுழுவதும் ஊரடங்குச் சட்டம் அமுலில் உள்ளதாலேயே ரத்துச்செய்யப்பட்டிருக்கலாம் என தெரிவிக்கப்படுகிறது. (இ)

## பலபொலிஸ் குழுக்கள் விசாரணை

(கொழும்பு)

காமினி திசாநாயக்காவின் கொலை குறித்து விசாரணை நடத்த பல பிரிவுகளாக பொலிஸ் விசாரணைக் குழுக்களை பொலிஸ்மா அதிபர் நியமித்துள்ளார்

# அண்மைக்காலத்தில் காமினி மகிழ்ச்சியாகக் காணப்படவில்லை

## பி. பி.ஸி செய்தியாளர் தெரிவிப்பு

(லண்டன்)

அண்மையில் நான் காமினி திசாநாயக்காவை சந்தித்து பேட்டி கண்டபோது அவர் மகிழ்ச்சியாக காணப்படவில்லை தேர்தல் வெற்றி குறித்து சந்தேகம் கொண்டவராகவே இருந்தார் மகாவலி திட்டத்தில் இவரின் லஞ்ச ஊழல் வெளிவந்திருக்கின்றது. இது மாபெரும்குற்றச்சாட்டுஆகும் எனபி. பி சி, செய்தியாளர் ஜோர்ஜ் ஆர்னிதெரிவித்தார்.

1981 இல் யாழ்ப்பாணத்தில் பொது நூலகம் தீயிடப்படுவதற்கு காரணமாக இருந்ததினாலும் இலங்கை - இந்திய ஒப்பந்தத்திற்கு ஆதரவாக இவர் செயற்பட்டமையினாலும் காமினி திசாநாயக்கா விடுதலைப் புலிகளின் இலக்காக மாறியிருக்கலாம்

ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு எதிராக அரசியல் குற்றப் பிரேரணையை கொண்டு வந்ததால் கட்சியிலிருந்து நீக்கப்பட்ட காமினி பின்னர் பிரேமதாசாவின் மறைவைத் தொடர்ந்து மீண்டும் ஐ. தே கவில் இணைந்தார் இதுகட்சியில் அவருக்கு பெரும் எதிர்ப்பை உருவாக்கியிருந்தது எனவும் தெரிவித்தார்,

# நவம். 9 இல் ஜனாதிபதித் தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறும்

## தேர்தல் ஆணையாளர் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் நவம்பர் 9ந் திகதி திட்டமிட்டபடி ஜனாதிபதி தேர்தல் நடைபெறுமெனவும், ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் வேறோர் வேட்பாளரை நியமிக்குமாறு கேட்கப்படவுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் சந்திரானந்த டீ சில்வா தெரிவித்துள்ளார்.

தேர்தல் சட்டத்தின்படி வேட்பாளர் நியமனத் திகதியிலிருந்து, தேர்தல் நடைபெறும் தினம்வரையில் யாராவது ஒரு வேட்பாளர் இறந்தால் வேறோர் வேட்பாளரை நியமிக்க 3 நாள் அவகாசம் மேற்படிகட்சிக்குவழங்கப்படும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதன்படி எதிர்வரும் வியாழக்கிழமைக்கு முன்னதாக வேறோர் வேட்பாளரை நியமிக்குமாறு ஐ.தே, க. கேட்கப்படவுள்ளதாகவும் தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

# குண்டுவெடித்த பகுதியை சுற்றிவளைத்து தேடுதல்

(கொழும்பு)

காமினி திசாநாயக்கா உட்பட 60 பேருக்கு மேற்பட்டோர் கொல்லப்பட்ட பகுதி சுற்றி வளைக்கப்பட்டுள்ளதாகவும்அப்பகுதியில் விசாரணைகள் தொடர்ந்து மேற்கொள்ளப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

இப்பகுதியைச் சுற்றிவளைத்துள்ள ஆயுதப்படையினர் அப்பகுதியில் இருந்து எவரும் வெளியேற அனுமதிக்கவில்லை எனவும், தீவிர தேடுதல் வேட்டை நடைபெறுவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# வைத்தியசாலையில் 20 சடலங்கள்

(கொழும்பு)

கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரேத அறையில் இதுவரை 20 சடலங்கள் வைக்கப்பட்டுள்ளதாக பொலிசார் தெரிவித்தனர்.

கொல்லப்பட்ட ஏனைய பலரின் சடலங்கள் அடையாளம் காண முடியாத நிலையில் இருப்பதாகவும், படுகாயமடைந்தவர்களின் இரத்தத்தினால் கொழும்பு பொது வைத்தியசாலையின் பிரதான நுழைவாயிலிலிருந்து அவசர சிகிச்சைப் பிரிவுவரை தரை முழுவதும்இரத்தமயமாக இருப்பதாகவும் பொலிசார் தெரிவித்துள்ளனர்

படுகாயமடைந்தோரால் கொழும்பு பொது வைத்தியசாலையின் அவசர சிகிச்சை பிரிவு நிரம்பி வழிவதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

# 18 மெய்க்காவலரும் குண்டு வெடிப்பில் பலி

(கொழும்பு)

நேற்று அதிகாலை கொட்டாஞ்சேனையில் நடந்த குண்டுவெடிப்பில் காமினி திசாநாயக்காவின் பதினெட்டு மெய்க்காப்பாளர்களும்கொல்லப்பட்டதாக பொலிசார் தெரிவித்துள்ளனர்.

தனது உரையை முடித்துக் கொண்டு, மக்களுக்கு வாழ்த்து தெரிவிக்க கையை உயர்த்தியபோது குண்டு வெடித்ததாக செய்தி ஒன்று தெரிவித்தது.

# வைத்திய சாலையிலேயே காமினி மரணமானார்

(கொழும்பு)

குண்டு வெடிப்பில், படுகாயமடைந்த நிலையில் காமினி திசாநாயக்கா வைத்திய சாலைக்குக் கொண்டு செல்லப்பட்டு அங்கு வைத்தே மரணமானதாக தெரியவருகின்றது.

இரத்தம் பெருக்கெடுத்தோடிய நிலையில், உடலில் பல பாகங்களில் ஆழமான காயங்களுடன் காமினி காணப்பட்டதாக ஸ்தலத்திலிருந்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்,

# இராணுவத்தினரின் லீவுகள் யாவும் ரத்து

(கொழும்பு)

இராணுவத்தில் உள்ள சகல மட்டத்தினரினதும் லீவுகள் ரத்து செய்யப்பட்டுள்ளன. இராணுவ தளபதி லெப். ஜெனரல் ஜெரி டி சில்வா இந்தரத்து உடனடியாக அமுலுக்கு வருவதாகவும் லீவில் உள்ள அனைத்துபடையினரும் உடனடியாக பணிக்கு திரும்புமாறும் உத்தரவிட்டுள்ளார்.

# இராணுவம் மீதான பிரதமரின் கூற்றைஎன்னால் ஜீரணிக்க முடியாது

## பி. பி. ஸிக்கு காமினி இறுதியாக வழங்கிய பேட்டி

(கொழும்பு)

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்த பேச்சுவார்த்தைகள் அவசியம்; ஆனால் இதற்காக ஓர் ஆபத்து நிலையை ஏற்படுத்தி அதில் நாட்டு மக்கள் வாழ வேண்டும் என கூறுவதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது என எதிர்க்கட்சித் தலைவரும். ஐ. தே. க, ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசாநாயக்கா தெரிவித்துள்ளார்;

லண்டன் பி. பி. ஸி.சிங்கள சேவைக்கு அளித்த பேட்டியொன்றில் மேற்படி கருத்தை அவர் தெரிவித்துள்ளார்; அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில், இராணுவத்தினர் மீது பிரதமர் சந்திரிகா கூறிய குற்றச்சாட்டை என்னால் ஜீரணிக்க முடியாது உள்ளது. இது இராணுவத்தினரின் மத்தியில் பலவீன நிலையை தோற்றுவித்துள்ளது,

இது ஆபத்தாக அமையும் இதனால் பாதிப்படைவது நாடும், நாட்டு மக்களுமே தவிர அரசியல் வாதிகளல்ல-

இதே வேளை இராணுவச் சதி குறித்து பரவலாகப் பேசப்படுகின்றது இதனை என்னால் முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாது. இது தனது அரசியல் இலக்கை அடைவதற்கு அரசியல் ரீதியில் சந்திரிகா எடுக்கும் முயற்சியாகவே கருத முடியும். எந்த ஒரு நாட்டின் அரசியல்வாதிகளும் தமது இராணுவத்தினரை வெளிப்படையாக விமர்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது என அவர் தெரிவித்தார்.

நாட்டையும் சுதந்திரத்தையும் நாட்டு நலனையும் பாதுகாக்கும் கடமையில் தம்மை முழுமையாக ஈடுபடுத்தும் இராணுவத்தினரை அரசியல்வாதிகள் விமர்சிப்பதை என்னால் எந்தக் கட்டத்திலும் ஏற்றுக்கொள்ள முடியாது- இன்று நாட்டின் யுத்த நிலையில் சிவில் சட்டத்தின் கீழ் இராணுவம் யுத்தம் செய்கின்றது இவர்கள் இதற்காக தமது உயிரையும் தியாகம் செய்கின்றனர்- இதே வேளை யுத்த பூமியில் நிற்பது இராணுவமே தவிர அரசியல்வாதிகள் அல்ல என்பதை பிரதமர் நன்கு உணர வேண்டும் என்றார்.

காமன் வெல்த் அமைப்பின்

## பாராளுமன்ற தலைவராக ரத்நாயக்கா தெரிவு

(கொழும்பு)

காமன் வெல்த் பாராளுமன்ற அமைப்பின் தலைவராக சிறிலங்கா பாராளுமன்ற சபாநாயகர் கே. பி. ரத்நாயக்க தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை சிறிலங்கா ஜனாதிபதியின் செயலாளராக பதவி வகிக்கும் திரு. விஜெதாச இச்சர்வதேச பொதுநலவாய நாட்டின் உதவி பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## 5-ம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வி

**கலாரேகா கதிர்காமத்தம்பி**

மலர்வு 14-05-1974

உதிர்வு 20.10-1989

5-வது திதி நாள்: 25-10-1994

மகளே கலா! ''அன்னை இல்லம்'' உன்னை இழந்து
ஆண்டுகள் ஐந்து ஆனது அம்மா!
அந்தக் கொடிய நாளை நினைக்கையில்
நெஞ்சம் இன்னும் குமுறுது அம்மா!
மொட்டு விரிந்து மலர்ந்தவேளை - உனைக்
கட்டி அணைத்தன எம் கரங்கள்
பட்டுத்தளிர் உடல் கருகிய காலை -கண்ணீரைக்
கொட்டித் தீர்த்தன எம் விழிகள்
கண்ணால் சிரித்து கரும் பின்னலை அசைத்து
வண்ணக் கனவினை எண்ணத்தில் வளர்த்து விட்டு
தட்டொன்றில் சேர்ந்துண்டு தடுக்கொன்றில்
சேர்ந்துறங்கி
பாசக் கூட்டுக்குள் நீ அடித்த கும்மாளம் தான்
எத்தனை
மங்கைப்பருவத்திலே எங்களை தவிக்கவிட்ட மகளே!
கங்கைபோல் பாயும் எம் கண்ணீரைப் பாரம்மா!
வீட்டுச் சுவரதிலே விழிகளை நீ மூடாமல்
காட்டுகின்ற புன்னகையில் உன் உயிரைச்


மலிவு விற்பனை!

# திருமாட்டி

(சீமாட்டி)

புடைவைக்கடல்

## மாபெரும் தீபாவளி மலிவு விற்பனை!

ஓர் அரிய வாய்ப்பு !

எமது இனிய வாடிக்கையாளர்களுக்கும் மற்றும் அனைவருக்கும் இன்றும் என்றும் இல்லாத ஓர் அரிய சந்தர்ப்பம்!!
மங்களகரமான தீபாவளித் தினத்தைமுன்னிட்டுஅனைத்து ஜவுளித்தினிசுகளும் மலிவுவிலையில் விற்பனையாகின்றன ! ! !

உங்கள் தேர்வுக்கு இன்றே முந்துங்கள்!

தலைநகரில் சுபமுகூர்த்தப் புடைவைகளுக்குக் கைராசியான ஒரே ஸ்தாபனம்

# திருமாட்டி

(சீமாட்டி)

புடைவைக்கடல்

122, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

(சி-10544)



# ஜொனி

## ஊர்தியுதிரிச் சீர்க்களம்

★ கிராங் வெட்டும் பகுதி ★

வாகன உரிமையாளர்களே உங்கள் மனதிற்குத் திருப்தியான முறையில்

★ உழவு இயந்திரம் ★ லிஸ்ரர்

★ அசோக் லெயிலண்ட் ★ ஒஸ்ரின்

★ மிற்சுபிசி றோசா ★ யன்மார்

★ டாட்டா பென்ஸ் ★ குபோட்டா

★ இசூசு ஈ. எல். எவ். ★ ஒக்ஸ்போட்

மேற்படி வாகனங்களுக்கான கிராங் வெட்டும் வேலைகள் காலதாமதம் இன்றி சிறந்த தொழில் நுட்பவியலாளரைக் கொண்டு சிறந்த முறையில் வெட்டி சீர்படுத்திக் கொள்ள

★ கிராங் வெட்டும் பகுதி ★

ஜொனி ஊர்தியுதிரிச் சீர்க்களம்


## வேளாண்மன்னர் தெரிவு

### செய்கையாளருக்கு அழைப்பு

1994/95-ம் ஆண்டுக்கான வேளாண் மன்னர் தெரிவுப் போட்டியில் பங்குபற்றுமாறு சகல நெற்செய்கையாளர்களுக்கும், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் அழைப்பு விடுத்துள்ளனர்.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் சென்ற ஆண்டு தொடக்கம் நடாத்தப்பட்டுவரும் இப்போட்டியில் வடதமிழீழத்தின் சகல மாவட்டத்திலுள்ள நீர்பாய்ச்சுகையின் கீழும் மழையை நம்பிய செய்கையிலும் ஈடுபட்டுள்ள நெற்செய்கையாளர்கள் பங்குபற்ற முடியும்.

இவர்களிடையே மாவட்ட ரீதியாக மிக கூடுதலான விளைவுகளை பெறும்செய்கையாளர்களுக்கு ''வேளாண் மன்னர்'' விருதும் விசேட பரிசில்களும் வழங்கப்படும் இப்போட்டியில் பங்கு பற்ற ஆர்வமுள்ளோர் தேவையான விண்ணப்பப்படிவங்களை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன முதன்மை செயலகம் மற்றும் மாவட்ட, கோட்ட, வட்ட அலுவலகங்களில் அல்லது கிராமிய உற்பத்திக் குழு விவசாய திணைக்களமும், கமநல சேவைத் திணைக்களம் பசுமை நிலையங்கள் ஆகியவற்றில் பெற்று 10-11-94 திகதிக்குள் விண்ணப்பிக்குமாறு வேண்டப்படுகின்றனர்.

சென்ற வருடம் இப் போட்டியில் வெற்றியீட்டியோருக்கு தமிழீழ தேசியத் தலைவரால் வேளாண் மன்னர் விருதும் தங்கப்பதக்கங்களும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## பனைவிதை நடுகை

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினரால் ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவரும் கற்பகச் சோலை திட்டத்தின் கீழ் நாவற்குழிப் பகுதியில் பனைவிதை நடுகை செயற்பாடு ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சாவகச்சேரிப் பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்தின் கீழ் மிகுந்த உற்சாகத்துடன் நடுகை மேற்கொள்ளப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.


# G. S. லிங்கநாதன் அன் கோவின்

## மாபெரும் தீபாவளி மலிவு விற்பனை வாரம்

எமது வாடிக்கையாளர் உட்பட அனைவருக்கும்
ஓர் அரிய சந்தர்ப்பம்
உங்கள் தெரிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்
மலரும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு
அனைத்து ஜவுளிகளும்
மலிவு விலையில் விற்பனையாகின்றன
தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஞாயிறு
[30- 10- 94] வியாபார நிலையம் திறந்திருக்கும்

## "மாபெரும் மலிவு விற்பனை"

ச. லிங்கநாதன்

மகளே கலா! ''அன்னை இல்லம்'' உன்னை இழந்து
ஆண்டுகள் ஐந்து ஆனது அம்மா!
அந்தக் கொடிய நாளை நினைக்கையில்
நெஞ்சம் இன்னும் குமுறுது அம்மா!
மொட்டு விரிந்து மலர்ந்தவேளை - உனைக்
கட்டி அணைத்தன எம் கரங்கள்
பட்டுத்தளிர் உடல் கருகிய காலை -கண்ணீரைக்
கொட்டித் தீர்த்தன எம் விழிகள்
கண்ணால் சிரித்து கரும் பின்னலை அசைத்து
வண்ணக் கனவினை எண்ணத்தில் வளர்த்து விட்டு
தட்டொன்றில் சேர்ந்துண்டு தடுக்கொன்றில்
சேர்ந்துறங்கி
பாசக் கூட்டுக்குள் நீ அடித்த கும்மாளம் தான்
எத்தனை
மங்கைப்பருவத்திலே எங்களை தவிக்கவிட்ட மகளே!
கங்கைபோல் பாயும் எம் கண்ணீரைப் பாரம்மா!
வீட்டுச் சுவரதிலே விழிகளை நீ மூடாமல்
காட்டுகின்ற புன்னகையில் உன் உயிரைக்
காண்கின்றோம் அம்மா!

''அன்னை இல்லம்''
குரும்பசிட்டி, - குடும்பத்தினர்
தெல்லிப்பழை; 25/10/1994

*(6164)*

---

★ அசோக் லெயிலண்ட் ★ ஒஸ்ரின்
★ மிற்சுபிசி றோசா ★ யன்மார்
★ டாட்டா பென்ஸ் ★ குபோட்டா
★ இசூசு ச. எல். எவ். ★ ஒக்ஸ்போட்

மேற்படி வாகனங்களுக்கான கிராங் வெட்டும் வேலைகள் காலதாமதம் இன்றி சிறந்த தொழில் நுட்பவியலாளரைக் கொண்டு சிறந்த முறையில் வெட்டி சீர்படுத்திக் கொள்ள

## ★ கிராங் வெட்டும் பகுதி ★

# ஜோனி ஊர்தியுதிரிச் சீர்க்களம்

சட்டநாதர் சிவன் கோவிலடி நல்லூர்

*(6181)*

---

மலரும் தீபாவளித் திருநாளை முன்னிட்டு
அனைத்து ஜவுளிகளும்
மலிவு விலையில் விற்பனையாகின்றன
தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு ஞாயிறு
[30- 10- 94] வியாபார நிலையம் திறந்திருக்கும்

# "மாபெரும் மலிவு விற்பனை"

## ச. லிங்கநாதன்
## வண்ணச்சோலை

*13/14* பெரியகடை வீதி, சோதியா தெரு
யாழ்ப்பாணம். *(6167)*

---

மலரும் தீபாவளியில் பெருவாழ்வு பெற்று செழிப்புடனே இனிது வாழ எம் இதயம் கனிந்த
தீபாவளி நல்வாழ்த்துக்கள்

சிறந்த ரகம் நிதான விலை

வெளிநாட்டிலிருந்து
இறக்குமதி செய்யப்பட்ட
## சேட்டிங், சூட்டிங்,

கண்ணைக்கவரும் றெடிமேட்
## ஸ்கேட் & பிளவுஸ்
மாட்டின்சேட், கசின் (*Gazine*) சேட்

பட்டுவேட்டி

சால்வைகளையும்
## லலிதா பட்டுச்சோலை

# ல
# லி
# தா
# பட்டுச்சோலை

மங்கள வைபவங்களுக்கேற்ற
## ச.டைத்திரிசுகள்

## காஞ்சிபுரம்
பெனாரஸ், மைசூர்சில்க்ஸ்

மலிவான விலையில்

பெற்றுக்கொள்ள ஒரேஇடம்
5,6, சிறப்பு அங்காடி,
யாழ்ப்பாணம்.

*(சி-10552)*

**சிந்தனைக்கு..**

செயல் மறக்கப்படலாம்; ஆனால்
அதன் விளைவு தொடர்கிறது.

-ஒவிட்

ஈழநாதம்

61, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 25-10-1994
தொலைபேசி
ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2624
தபாற்பெட்டி எண் -65

# ஐ.தே.க. அறிமுகப்படுத்திய ஆயுத வன்முறை

சிறிலங்கா அரசியற் தலைவர்களில் வன்முறைக்குப் பலியாகிய பட்டியலில்எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க. ஜனாதிபதி வேட்பாளருமான காமினி திசாநாயக்காவும் சேர்ந்து கொண்டுள்ளார். காமினி திசாநாயக்காவின் இம் மரணமானது சிறிலங்கா அரசியல் வரலாற்றில் இடம் பெற்று வரும் வன்முறையின் தொடர்ச்சியான தொரு அம்சமே ஆகும்.

இவ் அரசியல் வன்முறையானது கடந்த காலத்தில் ஆட்சியில் இருந்த ஐக்கிய தேசியக் கட்சியினால் உருவாக்கப்பட்டதே ஆகும்; அரசியல் ரீதியான பிரச்சினைகளை எப்பொழுது ஆயுத ரீதியாக தீர்ப்பதற்கு ஐக்கிய தேசியக்கட்சி முனைந்ததோ அன்றிலிருந்தேஅரசியல் வன்முறைகளும் ஆரம்பிக்கப்பட்டதெனலாம்.

இந்த வகையில் பார்க்கும் போது காமினி திசாநாயக்கா ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சியில் இல்லாத வேளையில் கொல்லப்பட்டாராயினும், இது ஐக்கிய தேசியக்கட்சியின் ஆட்சியினால் விளைந்த ஒரு அம்சமே ஆகும்; வேறு வகையில் கூறுவதானால் ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய இரத்தம் தோய்ந்த அரசியல் வரலாறு இன்னமும் முடிவடையவில்லை என்றே எண்ண வைக்கின்றது.

ஐக்கிய தேசியக்கட்சி நடத்திய இவ் இரத்தம் தோய்ந்த அரசியல் வரலாற்றில் காமினி திசாநாயக்காவின் பங்கு எந்தளவிற்கு உள்ளது என்பதை தற்பொழுது எவருமே மதிப்பீடு செய்து விட முடியாது. ஆனால் அரசியல் வன்முறைக்களத்தில் காமினி திசாநாயக்காவின் பங்கு கணிசமானதாகவே இருந்தது என்பதை எவரும் மறுத்து விடவும் முடியாது;

1977இல் பாராளுமன்றத்தினுள் புகுந்த காமினி திசாநாயக்கா அன்றைய ஆட்சித்தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் செல்லப்பிள்ளையாகவே வளர்ந்தவர்; அவரது திட்டங்களை செயற்படுத்தும் முக்கிய கருவியாகவும் செயற்பட்டவர். இந்தவகையில் அன்றைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் மேற்கொண்ட ஜனநாயக விரோதச் செயல்களை நடை

# இரு வைத்திய அதிகாரிகள் ஓய்வுபெறுவதால் நெருக்கடியில் பருத்தித்துறை ஆஸ்பத்திரி

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் சகல சிகிச்சைப் பிரிவுகளும் ஸ்தம்பிக்கும் அபாய அறிகுறிகள் தென்பட்டுவருகின்றன.

சிறிலங்கா அரசினால் கொண்டு வரப்பட்ட அறுபது வயதுக்கு மேற்பட்டோர் சேவையில் இருந்து ஓய்வு பெற வேண்டுமென்ற பணிப்பையடுத்து இவ் வைத்திய சாலையில் இருந்து விலக்கப்படும் மாவட்ட வைத்திய அதிகாரி, சிறுவர்களுக்கான சிகிச்சைப் பிரிவு வைத்திய நிபுணர் ஆகிய இரண்டு முக்கிய நிபுணர்களும் நீக்கப்படுவதையடுத்தும் இவர்களது இடத்திற்கு புதியவர்கள் எவரும் நியமிக்கப்படாததையடுத்தும் இவ் வைத்தியசாலையின் செயற்பாடுகள் அனைத்தும் செயலிழந்து போக கூடிய நிலையில் அபாயகரமான ஒரு சூழ்நிலை உருவாகி வருகிறது

வைத்தியசேவை மக்களின் அன்றாட முக்கிய தேவைகளில் அத்தியாவசியமானதொன்று இன்றைய யுத்த காலத்தில் இச் சேவை அளப்பரியது ஒவ்வொரு மனிதனுக்கும்இச் சேவை தினமும் ஒவ்வொரு வகையில் தேவைப்பட்ட நிலையிலேயே உள்ளது.

இந்த வைத்தியசாலையில் முன்னர் செயற்பட்டு வந்த கண், காது சிகிச்சைப் பிரிவுகள் நாளடைவில் செயலிழந்தன. இந்த வைத்தியசாலையில் இப்பகுதி மக்களுக்கு மேற்குறித்த சிகிச்சைகள் கடந்தபல வருடங்களாக இல்லாமல் போய்விட்டது. இங்கிருந்த கண், காது நிபுணர்கள் வேறு இடங்களுக்கு மாற்றலாகி சென்றதே இதற்குக் காரணம் புதியவர்கள் இச்சிகிச்சைக்கு நியமிக்கப்படாததால் இச் சிகிச்சை இந்த வைத்தியசாலையில் இருந்து அந்நியப்படுத்தப்பட்டன.

வடமராட்சியில்முக்கியகேந்திரம் வாய்ந்த வைத்திய சாலையாக இவ்வைத்திய சாலை செயற்பட்டு வருகிறது. வடமராட்சியில் உள்ள ஒரு இலட்சம் மக்களின் உயிர்களுக்கும் வைத்தியசாலையாக விளங்கும் இந்த வைத்திய சாலை நோயாளிகளின் உயிருக்கே உத்தரவாதம் இல்லாத வகையில் மூடப்படும் அபாய அறிகுறிகளை எதிர்நோக்கிஉந்தப்பட்டுசெல்கிறது

யாழ் மாவட்டத்தில் இரண்டாவதாக விளங்கும் இந்த வைத்தியசாலை அபாயகரமான ஒரு நிலையை எதிர்நோக்கிசெல்வதினால் மக்கள் மத்தியில் அதிருப்தி நிலை காணப்படுகிறது. நாளொன்றுக்கு இந்த வைத்தியசாலையில் ஆயிரத்துக்கு மேற்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெறுகின்றனர், இவ் வைத்திய சாலையில் சலம், இரத்தம் சோதிக்கும் பிரிவுகள் சத்திர சிகிச்சைப் பிரிவு மன நோயாளிகள் சிகிச்சைப் பிரிவு. எக்ஸ்றே பிரிவு மற்றும் பிரிவுகள் இருந்துள்ளன. ஒவ்வொரு பிரிவுகளிலும் போதிய நிபுணர்கள் உத்தியோகத்தர்கள் இல்லாத போதிலும் தற்போது வேலை நீக்கம் செய்யப்பட்ட மாவட்டவைத்திய அதிகாரி தனது திறமையினாலும்சாதுரியத்தினாலும் நோயாளிகளின் தேவைகள் பூர்த்தி செய்யப்படும் வகையில் தனது நிர்வாகத்தை நெறிப்படுத்தி வந்தார்.

இந்த மாவட்ட வைத்திய அதிகாரி இவ் வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாகவும் மருத்துவ சுகாதார அதிகாரியாகவும்மன நோயாளிகளின் சிகிச்சை நிபுணராகவும் செயற்பட்டு வருவது மட்டுமல்லாமல் மருத்துவ சான்றிதழ் வழங்கல், பொலிசாருக்கு காயப்பட்டவர்களின் அறிக்கை வழங்குதல், சடலங்கள் பரிசோதனை செய்து அறிக்கை வழங்குதல், மருத்துவ பரிசோதனை செய்யும் உத்தியோகத்தர்களுக்கு சான்றிதழ் வழங்குதல் போன்றவற்றையும் மேலாகக் கொண்டிருந்தார். இவர் கடமையில் இருந்து நீக்கப்பட்டு, இவரது இடத்திற்கு புதியவரை நியமிக்காது இருப்பது இத்தனை செயற்பாடுகளும் ஸ்தம்பித்து போகின்ற அபாய அறிகுறிகளையே எடுத்துக்காட்டுகிறது இவர் நீக்கப்பட்டு புதியவர் நியமிக்கப்படாது விட்டால் இந்த வைத்தியசாலை ஒரு கிராமிய வைத்தியசாலையின் தரத்தைவிட குறைவாகவே கணக்கிடக் கூடியதாக அமையும்.

இதேபோன்று இவருடன் வேலை நீக்கம் செய்யப்பட்ட சிறுவர்களுக்கான நிபுணரும் இங்கே முக்கியமான நிலையில் பணிபுரிந்து வருகிறார். இவர் இந்த வைத்தியசாலையில் மட்டுமல்ல வல்வெட்டித்துறை. சாவகச்சேரி வைத்தியசாலைகளின் சிறுவர்களுக்கான சிகிச்சை நிபுணராக பணியாற்றுகிறார் இதே நிலையில் இவரது இடத்திற்கு நிபுணர் ஒருவரை நியமிக்காது நீக்குவதால் மூன்று வைத்திய சாலைகளின் சிறுவர் சிகிச்சைப்பிரிவுகள் அஸ்தமித்து விடுகின்றன. மூன்று வைத்தியசாலைகளில் இருந்து நூற்றுக்கணக்கான பிள்ளைகள் இவரின் தயவையே எதிர்பார்த்து நிற்கின்றனர். ஒவ்வொரு வைத்தியசாலையிலும் ஒவ்வொரு சிறுவர்களுக்கான நிபுணர்கள் இருக்கவேண்டிய போது இவர் ஒருவர் மட்டும் மூன்று வைத்தியசாலைகளில் உள்ள சிறுவர்களைபார்வையிட்டு வருகின்றார். இதே வேளை பதில் நியமனம் இல்லாமல் இவரை கடமையில் இருந்து நீக்குவதால் மூன்று வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்றுவரும் சிறு குழந்தைகளின் கதி என்னவாகும்? பதில் நியமனம் செய்யாமல் இவர்களை கடமையில் இருந்து நீக்கம் செய்யப்பட்டது பெரும் சோதனைக்களமாக உள்ளது.

இன்றைய நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்திய சாலையை எடுத்துப் பார்த்தால் ஐந்து வைத்திய நிபுணர்கள் இருக்க வேண்டிய இடத்தில் ஒரு வைத்திய நிபுணரே பணியாற்றுகிறார். மகப்பேற்று பிரிவுக்கு இவர் நிபுணராக உள்ளார். இவருக்கும் ஒரு இடமாற்றம் ஏற்படுமானால் நிபுணர்கள் இல்லாத வைத்தியசாலையாக இது மாறும். பன்னிரெண்டு பட்டதாரி டாக்டர்கள் இருக்க வேண்டிய இடத்தில் தற்போது ஒருவர் மட்டுமே, உள்ளார். அவரோடு ஐந்து உதவி வைத்தியர்களும் இருக்கின்றனர் இந்த நிலையில் இந்த வைத்தியசாலை செயற்படுகிறது;

இது மட்டுமல்ல போதியளவு ஆய்வு கூட பரிசோதகரும் இல்லை; ஐந்து பேர் இருக்க வேண்டிய இடத்தில் இருவர் மட்டும் உள்ளனர். எக்ஸ்றே படம் எடுப்பதற்கு நிரந்தரமான உத்தியோகத்தர் கிடையாது. காசநோய் பிரிவுக்கு வைத்திய நிபுணர் இல்லை. வைத்திய அதிகாரிகள் இல்லாததினால் தொண்டர் வைத்திய அதிகாரியாக ஓய்வு பெற்ற ஒருவர் பணி புரிந்தார். அவரும் தற்போது கடமையில் இல்லை. இவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் இந்த வைத்தியசாலை நோயாளிகளை குணப்படுத்திக் கொண்டிருந்த போது பதில் நியமனம் இல்லாமல் இங்குள்ள மாவட்ட வைத்திய அதிகாரியையும் சிறுவர்களுக்கான சிகிச்சை நிபுணரையும் கடமையில் இருந்து நீக்க நடவடிக்கை எடுத்தது நோயாளிகள் மத்தியில் பீதியும் அவலமும் ஏற்பட்டுள்ளது.

இந்த வைத்தியசாலையில் பன்னிரெண்டுமலசலகூடங்கள இருக்கின்றன. இவை அனைத்தும் வாளிகள் மூலம் எடுக்கின்ற மலசலகூடங்கள் சிறிலங்காவில் நீர் வசதியில்லாத வாளி மலசலகூடங்கள் இருப்பது இந்த வைத்தியசாலையில் தான் என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

**எம்.கே. யோகரட்ணம்**
**(வடமராட்சி செய்தியாளர்)**

இப்பகுதி மக்களின் நோயின் தேவைகளை உணர்ந்து சேவையாற்றக்கூடிய வகையில் இந்த வைத்தியசாலை செயற்படவேண்டும். அதற்கேற்றாற் போல் பதவி நீக்கம் செய்யப்பட்ட இரண்டு நிபுணர்களின் சேவை மேலும் தொடர அனுமதிக்கவேண்டும். இல்லையேல் இவர்களது இடத்திற்கு பதில் நியமனங்கள் உடனடியாகச் செய்யப்பட வேண்டும்தவறின் ஏற்படுகின்ற பாதிப்புக்கள் அனர்த்தங்கள் தவிர்க்க முடியாத தொன்றாகிவிடும்;

ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ்விடயத்தில் தமது முழுக் கவனத்தையும் செலுத்தி இந்த வைத்திய சாலைக்கு ஏற்படுகின்ற ஆபத்து நிலையை தவிர்க்க ஆக்க பூர்வமான நடவடிக்கைகளை எடுக்க தயங்காமல் முன்வருதல் அவசியம்.

# தேசத் துரோகிகள்

(வயது 36, வியாபாரம் ஸ்கந்தபுரம், கிளிநொச்சி)

★ பசுபதி யோகராசா (வயது 24, வியாபாரம் ஆஸ்பத்திரி வீதி, சங்கானை, யாழ்ப்பாணம். மாற்று முகவரி: நெடுங்கேணி, முல்லைத்தீவு)


இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு ஏற்பட்டு அத்தொடர்பினைப் பயன்படுத்தி வட பகுதிக்குள் தடை செய்யப்பட்ட பொருட்களை எடுத்து வந்து வியாபாரம்செய்து வந்தார்.

இக் காலப் பகுதியில் வவு

ரும் வவுனியாவிற்கு சென்று வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த வேளை இராணுவ உளவாளிகளுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டார். அவர்களுடைய உதவியுடன் வடபகுதிக்குள் தடைசெய்யப்பப்பட்ட பொருட்களை கொண்டு வந்து வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

டிற்கு தகவல்கள் கொடுத்து சன்மானமாக பணமும் தடைசெய்யப்பட்ட பொருட்களையும் பெற்றுக்கொண்டார். இவரால் காட்டிக் கொடுக்கப்பட்ட முகாம்களில் சில விமானத் தாக்குதல்களுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது குறிப்பாக நெடுங்கேணிப் பகு

# ஒஸி உடல்நிலை பாதிப்பு



ஐக்கிய தேசியக்கட்சி நடத்திய இவ் இரத்தம் தோய்ந்த அரசியல் வரலாற்றில் காமினி திசாநாயக்காவின் பங்கு எந்தளவிற்கு உள்ளது என்பதை தற்பொழுது எவருமே மதிப்பீடு செய்து விட முடியாது. ஆனால் அரசியல் வன்முறைக்களத்தில் காமினி திசாநாயக்காவின் பங்கு கணிசமானதாகவே இருந்தது என்பதை எவரும் மறுத்து விடவும் முடியாது.

1977இல் பாராளுமன்றத்தினுள் புகுந்த காமினி திசாநாயக்கா அன்றைய ஆட்சித் தலைவர் ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் செல்லப்பிள்ளையாகவே வளர்ந்தவர். அவரது திட்டங்களை செயற்படுத்தும் முக்கிய கருவியாகவும் செயற்பட்டவர். இந்தவகையில் அன்றைய ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கம் மேற்கொண்ட ஜனநாயக விரோதச் செயல்களை நடைமுறைப்படுத்தும் ஒரு துடிப்புள்ள இளம் அரசியல்வாதியாக காமினி திசாநாயக்கா செயற்பட்டார்.

இந்த வகையிலேயே யாழ்ப்பாணத்தில் 1981 இல் இடம்பெற்ற மாவட்ட சபைத் தேர்தலிலும் அதைத் தொடர்ந்து ஏற்பட்ட வன்முறையிலும் காமினி திசாநாயக்காவின் கைபதிந்தது இதன்வெளிப்பாடாக யாழ். பொதுநூலகம் எரிக்கப்பட்டது பொலிசாரின் அட்டூழியங்களும்யாழ்ப்பாணத்தில் நடந்தேறியது இதில் காமினி திசாநாயக்காவின் பங்கு நேரடியாகவே இருந்தது.

இதே போன்றதொரு நடவடிக்கையாகவே 1983 இல் நடைபெற்ற இனக்கலவரத்தின் போதும் காமினி திசாநாயக்காவின் செயற்பாடுகள் இருந்தன. மலையகத்தில் குறிப்பாக நுவரெலியாப் பகுதியில் அவரின் வழிகாட்டலில் செயற்பட்ட ஐ.தே.க. குண்டர்களே இனக்கலவரத்தை நடத்தினார்கள். இவ்வன்முறையில் மலையகத் தமிழ் மக்கள் பலர் கொல்லப்பட்டதோடு, அவர்களின் பெருமளவு சொத்துடமைகளும் சேதமாக்கப்பட்டன.

ஆனால் ஜே.ஆர், ஜெயவர்த்தனா ஆட்சிப் பீடத்தில் இருந்து இறங்கிய பின்னரும் அதாவது பிரேமதாசா அரசாங்கத்தில் காமினி திசாநாயக்கா அங்கம் வகிக்கத் தவறவில்லை, சிறிது காலத்தில், ஜனாதிபதி பிரேமதாசாவுடன் ஏற்பட்ட முரண்பாட்டைத் தொடர்ந்து லலித்துடன் இணைந்து காமினி திசாநாயக்கா வெளியேறினாலும் தென்னிலங்கையில் இடம்பெற்ற பெரும் படுகொலைகளின் போதும் ஐ.தே.க, அரசாங்கத்தில் அவர் அங்கம் வகித்தே வந்தார். அன்றைய படுகொலைகளை அவர் கண்டிக்கவும் இல்லை. மறுவளமாக ஜனாதிபதி பிரேமதாசா தலைமையில் இடம்பெற்ற படுகொலைகளில் இவர்களும் குளிர் காய்ந்தார்கள் என்றே கூறலாம்.

தற்பொழுதுகூட அரசியலில் இராணுவம் பெற்றுவிட்ட முதன்மையை அரசாங்கமும், அரசியற்கட்சிகளும் அங்கீகரிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டிலேயே அவர் இருந்து வந்துள்ளார். அதாவது அரசியற் பிரச்சினைகள் எதையும் ஆயுத வன்முறைகள் மூலமே தீர்க்கப்பட வேண்டும் என்ற கருத்தே அவரிடம் மேலோங்கியிருந்தது.

ஆகையினால் காமினி திசாநாயக்கா ஆயுத வன்முறைக்குப் பலியாகியிருப்பது என்பது அவர் தேர்ந்தெடுத்த வழிமுறைக்கே அவரும் பலியாகியிருப்பதைக் காட்டுகின்றது. இந்நிலையில் காமினி திசாநாயக்காவின் மரணமானது ஐ.தே.க, சிறிலங்கா அரசியலில் தவிர்க்க முடியாத அம்சமாக மாற்றிவிட்ட ஆயுத வன்முறையின் தொடர் அம்சம் எனக் கூறுவதைத் தவிர வேறு வழியில்லை.

---

இங்கிருந்த கண், காது நிபுணர்கள் வேறு இடங்களுக்கு மாற்றலாகி சென்றதே இதற்குக் காரணம் புதியவர்கள் இச்சிகிச்சைக்கு நியமிக்கப்படாததால் இச்சிகிச்சை இந்த மாவட்ட வைத்திய அதிகாரி இவ் வைத்தியசாலையில் மாவட்ட வைத்திய அதிகாரியாகவும் மருத்துவ சுகாதார அதிகாரியாகவும்மன நோயாளிகளின் சிகிச்சை நிபுணர்... பார்த்து நிற்கின்றனர். ஒவ்வொரு வைத்தியசாலையிலும் ஒவ்வொரு சிறுவர்களுக்கான நிபுணர்கள் இருக்கவேண்டிய போது இவர் ஒருவர் மட்டும் மூன்று வைத்தியசாலைகளில் தொண்டர் வைத்திய அதிகாரியாக ஓய்வு பெற்ற ஒருவர் பணி புரிந்தார். அவரும் தற்போது கடமையில் இல்லை. இவ்வளவு கஷ்டங்களின் மத்தியில் இத்த வைத்திய சாலைக்கு ஏற்படுகின்ற ஆபத்து நிலையை தவிர்க்க ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்க தயங்காமல் முன்வருதல் அவசியம்.

---

# தேசத் துரோகிகள்

(வயது 36, வியாபாரம் ஸ்கந்தபுரம், கிளிநொச்சி)

★ பசுபதி யோகராசா (வயது 24, வியாபாரம் ஆஸ்பத்திரி வீதி, சங்கானை, யாழ்ப்பாணம். மாற்று முகவரி: நெடுங்கேணி, முல்லைத்தீவு)

ஆகியோரின் விபரங்களே வெளியிடப்பட்டுள்ளன.

இது குறித்து வெளியிடப்பட்ட அறிக்கையின் விபரம் வருமாறு:

கடந்த 1993-ம், 1994-ம் ஆண்டுகளின் காலப் பகுதிகளில் சிறிலங்கா இராணுவத்தின் உளவாளிகளுடன் தொடர்பினை ஏற்படுத்தி எமது விலைமதிக்க முடியாத விடுதலைப் போராட்டத்தினையும் அப் போராட்டத்தோடு தம்மை இறுகப் பிணைத்து நிற்கும் மக்களையும் எதிரிக்கு காட்டிக் கொடுத்து தேசத் துரோகம் புரிந்த நால்வர் தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டு அவர்களின் விசாரணைகளும் பூர்த்தியடைந்துள்ளது.

தமது தனிப்பட்ட தேவைகளுக்காகவும், வியாபார நோக்கத்திற்காகவும்இவர்கள் வவுனியா சென்று வந்த வேளையில் அங்கு இராணுவ உளவாளிகளுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டனர். அவர்களால் வழங்கப்பட்டஅற்ப சலுகைகளுக்காக எமது தாயக விடுதலைப் போரைக் காட்டிக் கொடுத்தனர் என்பது இவர்களின் விசாரணையில்இருந்துதெரிய வந்துள்ளது.

ஸ்கந்தபுரம், கிளிநொச்சியைச் சேர்ந்த சின்னராசா என்று அழைக்கப்படும் வடிவேல் அல்பிறட், அதே இடத்தை சேர்ந்த சின்னராசா என அழைக்கப்படும்நடராசா சந்திரகுமார், 03-ம்வட்டாரம் முள்ளியவளையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் செல்வராசா சங்கானை யாழ்ப்பாணத்தை சேர்ந்த பசுபதி யோகராசா ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவர்.

வடிவேல் அல்பிறட் 1993 ஆம் ஆண்டு 05-ம்மாதமளவில் ஊரில் தமக்கு இருந்த கடன் தொல்லைகளில் இருந்துதாம் தப்புவதற்காக வவுனியா நகரப் பகுதிக்கு சென்று அங்கு வாழத்தொடங்கினார். அங்கு இருந்த காலப் பகுதியில் இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு ஏற்பட்டு அத் தொடர்பினைப் பயன்படுத்தி வட பகுதிக்குள் தடை செய்யப்பட்ட பொருட்களை எடுத்து வந்து வியாபாரம்செய்து வந்தார்.

இக் காலப் பகுதியில் வவுனியா ஜோசப் இராணுவ முகாமிற்கும் சென்று வந்த இவர் தனது வியாபாரத்தை மேலும் அதிகரித்து தடையின்றிச் செல்வதற்காக விடுதலைப் புலிகளின் செயற்பாடுகளையும் அவர்கள் தங்கும் இடங்களையும், விடுதலைப் புலிகளின் ஆதரவாளர்களின் நிலைப்பாடுகளையும் இராணுவத்திற்கு தகவலாக வழங்கத் தொடங்கினார். தனது தனிப்பட்டகோபத்தை காரணமாக வைத்து இரண்டு அப்பாவித் தமிழ் மக்களை இராணுவத்தினருக்கு காட்டிக் கொடுத்து அவர்கள் சிறையில் அடைக்கப்படுவதற்கு காரணமாக விருந்தார்.

காலப் போக்கில் இராணுவ உளவுப் பிரிவின் முக்கியநபர்களாகக் கருதப்படும் முத்தலீம், லோறன்ஸ் ஆகியோருடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு அவர்களிற்கு யாழ்ப்பாணப்பகுதியில்குறிப்பிட்ட இடத்திற்கு விடுதலைப் புலிகளின் முக்கிய உறுப்பினர்கள் (முக்கியபொறுப்பாளர்கள்) வந்து செல்வது தொடர்பான தகவல்களைக் கொடுத்து அவர்களது ஆலோசனையுடன் அக் குறிப்பிட்ட இடத்தில் வெடிகுண்டு வைப்பதற்கான பொறுப்பினையும் ஏற்றுக் கொண்டார். இதன் பின்னர் இவருக்கு வெடிகுண்டினை தானியக்க கருவிமூலம் (றிமோட் கொன்றோளர்) வெடிக்க வைப்பதற்கான பயிற்சியும் வழங்கப்பட்டது. வடபகுதியிற்குள்வைத்துவெடிகுண்டினை இவரிடம் சேர்ப்பிப்பதற்கான ஒழுங்குகளும் நிறைவேற்றப் பட்டிருந்தன இந் நடவடிக்கை திட்டத்திற்காக இராணுவத்தினரிடம் இவர் பெரும் தொகையான பணத்தினை பேரம் பேசியிருந்தார் இதன் பின்பு வடபகுதிக்குள் வந்த வேளை கைது செய்யப்பட்டார்.

இரண்டாவது நபரான நடராசா சந்தரகுமார் என்பவரும், வடிவேல் அல்பிறட்டுடன் தொடர்பானவர். இவரும் வவுனியாவிற்கு சென்று வியாபாரத்தில் ஈடுபட்டு வந்த வேளை இராணுவ உளவாளிகளுடன் தொடர்பினை ஏற்படுத்திக் கொண்டார். அவர்களுடைய உதவியுடன் வடபகுதிக்குள் தடைசெய்யப்பப்பட்ட பொருட்களை கொண்டு வந்து வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தார்.

இவ்வாறு இராணுவ உளவாளிகளுடன் ஏற்பட்ட நெருக்கமான தொடர்பினைப் பயன்படுத்தி அற்ப சலுகைகளைப் பெற்றுக்கொள்வதற்காக விடுதலைப் புலிகளின் முகாம்கள், இயக்கத்தின் முக்கியஉறுப்பினர்கள் தங்குமிடங்கள், மற்றும்பல இயக்க செயற்பாடுகளை அவர்களுக்கு தெரிவித்து வந்தார். இவற்றிற்கு சன்மானமாக ராணுவத்தினரிடம் இருந்து பல தடவைகள் தடை செய்யப்பட்ட பொருட்களை நேரடியாகப் பெற்று வந்து விற்பனை செய்துள்ளார்.

மூன்றாவது நபரான முள்ளியவளையைச் சேர்ந்த சிவப்பிரகாசம் செல்வராசா என்பவருக்கும் வவுனியாவிலேயே இராணுவ உளவாளிகளுடன் தொடர்பு ஏற்பட்டது. அத் தொடர்பின் மூலம் விடுதலைப்புலிகளின்முகாம்கள் பலவற்றைக் காட்டிக் கொடுத்துள்ளார். அதற்காக பெரும் தொகை பணத்தினை இராணுவத்திடம் இருந்து பெற்றுள்ளதுடன், பல முறை தடை செய்யப்பட்ட பொருட்களைப் பெற்று வியாபாரம் செய்துள்ளார், மேலும் வடபகுதிக்குள் வெடிகுண்டு வைப்பதற்காக ஜோசப் இராணுவ முகாமில் வைத்து வெடிகுண்டு பயிற்சியினையும் இவர் இராணுவ உளவாளிகளிடம் இருந்து பெற்றுள்ளார்.

நான்காவது நபரான சங்கானை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த பசுபதி யோகராசா என்பவர் வவுனியா நகர் சென்று வரும்போது உளவாளியான எட்வேட்டுடன் தொடர்பினை ஏற்படுத்திக்கொண்டு தேச விரோத வேலைகளில் தீவிரமாக ஈடுபட்டு வந்தார். இதன்போது முல்லை மாவட்டத்தில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் முகாம்கள் தொடர்பான தகவல்களையும், விடுதலைப் புலிகளின் நடவடிக்கைகள் தொடர்பாகவும் எட்வேட்டிற்கு தகவல்கள் கொடுத்து சன்மானமாக பணமும் தடைசெய்யப்பட்ட பொருட்களையும் பெற்றுக்கொண்டார். இவரால் காட்டிக் கொடுக்கப்பட்ட முகாம்களில் சில விமானத் தாக்குதல்களுக்கு உள்ளாகியமை குறிப்பிடத்தக்கது குறிப்பாக நெடுங்கேணிப் பகுதியை மையமாக வைத்தே இவரது நடவடிக்கைகள் அமைந்திருந்தது. இப் பிரதேசத்தில் இருந்துகொண்டே தகவல்களை இராணுவத்தினருக்கு கொடுப்பதற்காக தொலை தொடர்பு சாதனப் பயிற்சியையும் இராணுவ உளவுப் பிரிவினரால் இவருக்கு வழங்கப்பட்டிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னைய காலங்களிலும் இவர்கள் போன்றோரின் தேசத் துரோகத்தனங்கள் விடுதலைப் புலிகளால் அடையாளம் காணப்பட்டு வெளிக்கொண்டுவரப்பட்டது குறிப்பிடத்தக்கது. தமது சொந்த நலன்களுக்காகவும் அற்ப சலுகைகளுக்காகவும் எதிரிக்கு தமது சொந்த தாயகத்தையும், எம் இனிய மக்களையும் காட்டிக் கொடுக்க துணிந்துள்ளனர். ஏதும் அறியாத அப்பாவி பொதுமக்கள், துன்ப துயரங்கள் என்னவென்று அறியாத பச்சிளம் பாலகர்கள் மற்றும் போராளிகள் மரணித்த கோரச் சம்பவங்கள் என்றும் இவர்களின் துரோகத்தனங்களை தமிழீழத்திற்கு நினைவூட்டும் வண்ணமே இருக்கின்றது

நெஞ்சை நோக்கும் எதிரிக்கு முகம் கொடுத்து உங்கள் குழந்தைகள் களத்தில் நின்று போராடி தங்கள் இன்னுயிர்களை எமது இனத்தின் விடிவிற்காக நாள்தோறும் தியாகம் செய்துகொண்டிருக்கும் இவ்வேளை துரோகத் தனங்களில் ஈடுபடுபவர்கள் தொடர்பாக மக்கள் விழிப்பாக இருந்து தமிழீழத்தை பாதுகாக்க வேண்டும்,

---

## திருமதி காமினி

செய்தவர்களை கண்டுபிடிக்க அரசாங்கம் எல்லா வகையாகவும் நடவடிக்கைகளை எடுக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

---

## ஒஸி உடல்நிலை பாதிப்பு



குண்டுவெடிப்பில் படுகாயமடைந்த கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ஒஸி அபே குணசேகரவின் உடல்நிலை மேலும் மோசமடைந்து வருவதாக வைத்திய அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

---

## புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

**1994-10-25**

**செவ்வாய் இரவு**

08.01- ஊர் சுற்றும் ஒலிவாங்கி

08.10- அறிந்து கொள்ளுங்கள்- தகவல் களஞ்சியம்

08.20- நலந்தானா - சலரோக வியாதி வருமுன்னர் காக்கவேண்டியதன் அவசியத்தையும் அதற்கான ஆலோசனைகளையும் வைத்திய கலாநிதி சுப்பிரமணியம் அவர்கள் வழங்குவார்

08.30- செய்திகள்

08.40- கருத்துக்களம்- இ. இராஜேஸ்வரன் எழுதிய ''விளக்கு''

08.50- களமும் கானமும்- எஸ். லாவண்யா எழுதிய ''நினைவுகள்''

**1994-10-26**

**புதன் காலை**

07.02- மாவீரவணக்கம்

07.15- நீங்கள் கேட்டவை

07.30- செய்திகள்


07.35- பத்திரிகைச் செய்திகள்

07.40- நீங்கள் கேட்டவை நிகழ்ச்சியின் தொடர்ச்சி

# பிரேமச்சந்திரா, மல்லிமாராச்சியுடன் காமினி விஜேசேகராவும் பலியாகினர்

நேற்று அதிகாலை கொட்டாஞ்சேனையில் நடந்த குண்டுவெடிப்பில், முன்னாள் அமைச்சர்களானவீரசிங்க மல்லிமாராச்சி, ஜி. எம். பிரேமச்சந்திரா, ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் காமினி விஜேசேகர ஆகியோரும் கொல்லப்பட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரத்தில், மேற்குறித்த மூவரும், காமினி திசாநாயக்காவுக்காக தீவிர ஆதரவு தொவித்து வந்தவர்களாவர் ஜி. எம். பிரேமச்சந்திரா காமினி மீண்டும் ஐ.தே கவில் இணைந்ததை கடுமையாக எதிர்த்து பின்னர் தானும் ஐ. தே. கவின் ஆதரவாளராக ஆனவராவார். வீரசிங்க மல்லிமாராச்சி, பிரேமதாசா ஜனாதிபதியாக இருந்தபோது காமினியின் எதிரணியில் ஒருவராக இருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



ஜி. எம். பிரேமச்சந்திரா



வீரசிங்க மல்லிமாராச்சி



டாக்டர் காமினி விஜேசேகரா

## உடனடி விசாரணைக்கு டி.பி.விஜேதுங்கா பணிப்பு

(கொழும்பு)

சட்டத்திற்கு உட்பட்ட விதத்தில் குற்றமிழைத்தவர்கள் மீது நடவடிக்கை மேற்கொள்ளவென உடனடியாக விசாரணைகள் ஆரம்பிக்க சட்ட அமுலாக்கல் அதிகாரிகளுக்கு பணிப்பு விடுக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

நேற்று அவசரகாலச் சட்டத்தையும், ஊரடங்குச் சட்டத்தையும் அமுலாக்கி அவர் விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவ்வறிக்கையில், கோழைத்தனமானதும், காட்டுமிராண்டித்தனமானதுமான இச்செயலை கண்டிப்பதாகவும், இது சம்பந்தமான தலைசிறந்த விசாரணையாளர்களைக் கொண்ட குழுக்களை பொலிஸ்மா அதிபர் நியமிக்க பணிப்பு விடுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், இத்தகைய வன்செயல்கள் எதிர்மறை விளைவுகளையே ஏற்படுத்தும் என்பதுபற்றி வற்புறுத்தி தெரிவிக்க வேண்டியதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## காமினி மேடைக்கு வந்து 15 நிமிடத்தில் குண்டு வெடித்தது

### அருகில் இருந்தவர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா தனது உரையை முடித்துக் கொண்டு மக்களை நோக்கி வணக்கம் செலுத்தும் போது குண்டு வெடிக்கும் பாரிய சத்தம் கேட்டதாகவும் இதனைத் தொடர்ந்து தான் மேடையில்

படப்பிடிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் நடைபெற 15 நிமிடங்களுக்கு முன்பாகவே காமினி திசாநாயக்கா கூட்டத்தில் கலந்து கொள்ள வந்ததாகவும் அப்போது நேரம் நள்ளிரவு சுமார் 12 மணியளவில் இருக்கும் என்றும் இத

முடித்துக் கொண்டு வெளியேற தயாராக இருந்ததாகவும் அப்போது சில பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுந்து நின்றதாகவும் தெரிவித்த அவர் குண்டு வெடிப்பை அடுத்து என்ன நடந்தது என்பதை தன்னால் ஊகிக்க முடி

## ஐ.தே க. செயலராக விமலசேன

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய பொதுச் செயலாளராக தஹாம் விமலசேன நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்று அதிகாலை கொழும்பில் நடைபெற்ற குண்டு வெடிப்பில் ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த விஜேசேகரா கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே அந்த இடத்திற்கு விமலசேன நியமிக்கப்பட்டுள்ளார்


## அடுத்த

பெயர்கள் அடிபடுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன

இன்று மாலை கூடும் இக்கட்சிக் குழு தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் எனவும் இதில் ரணில்விக்கிரமசிங்க தெரிவு செய்யப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக தென்படுவதாகவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன

உருக்குலையாத

## வீரச்சாவு



2-ம் லெப். கரிகரன்

நேற்று யாழ் மாவட்டத்தில் இராணுவத்துடன் ஏற்பட்ட மோதலில் விடுதலைப் புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவைத்தழுவிக் கொண்டார்.

வீரச்சாவடைந்த 2ம்-லெப். கரிகரன் (பொன்னுத்துரை சண்டேஸ்வரன், மட்டக்களப்பு) என்னும் போராளிக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.



வீரவேங்கை கிறிஸ்ரி (சின்னத்தம்பி)



வீரவேங்கை

## புலிகளின் தாக்குதலில் ஓர் அதிரடிப்படை பலி

நேற்றுக்காலை 8 20 மணியளவில் அம்பாறைமாவட்டம் பண்ணலகம விசேட அதிரடிப்படை முகாமிலிருந்தும்மிராகல விசேட அதிரடிப்படை முகாமிலிருந்தும், வெளியேறி வந்த விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப்புலிகள் திடீர்த் தாக்குதலை மேற்கொண்டனர்.

இத் தாக்குதலில் விசேட அதிரடிப்படையைச் சேர்ந்த ஒருவர் கொல்லப்பட்டார். ஏனையோர் காயங்களுடன் தப்பியோடி விட்டனர். இதே நேரம் மிராகல விசேட அதிரடிப்படை முகாமிலிருந்து உதவிக்கு வந்த விசேட அதிரடிப்படையினர் மீது விடுதலைப் புலிகளின் மற்றுமோர் அணி தாக்குதல் மேற்கொண்டது. இவ் வழிமறித்து தாக்குதலின் போது இராணுவத் தரப்பில் ஏற்பட்ட சேதவிபரம் தெரியவரவில்லை. இத் தாக்குதலில் விடுதலைப் புலிகள் தரப்பில் எவ்வித சேதமும் ஏற்படவில்லை.

இத் தாக்குதலில் ஆயுதங்கள் பலவும் விடுதலைப் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

அவற்றின் விபரம் வருமாறு

- ★ கோல்கொமாண்டோ - 01
- ★ மகசீன் - 04
- ★ 5 56 ரவை - 80
- ★ ஜே ஆர் கைக்குண்டு - 01
- ★ ஜக்கட் ஹோள்சர் - 01
- ★ தண்ணீர் கான் - 01
- ★ தொப்பி - 01

## மரண அறிவித்தல்கள்



பாலசுப்பிரமணியம் விவேகானந்தன்

(கச்சேரி)

புங்கடி புலோலி தெற்கைச் சேர்ந்த பாலசுப்பிரமணியம் விவேகானந்தன் (விலைக்கட்டுப்பாட்டு உத்தியோகத்தர், கச்சேரி, வவுனியா) 22-10-94 சனிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி பாலசுப்பிரமணியத்தினதும், தெய்வானைப்பிள்ளையினதும் சிரேஷ்ட புதல்வரும், சிவசுப்பிரமணியத்தின் பெறாமகனும், சங்காதேவி, பாஸ்கரதேவி, விபுலானந்தன் குமாரகுலசிங்கம், சிவராசகோபால், ஜெயராணி, ஜெயந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நவரட்ணராஜவேல், நாகநாதன், கெங்காதேவி, தேவகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், செந்தூரா, ஞானேந்திரா, தனலோஜினி, குகசங்கர் ஆகியோரின் மாமனாரும், துஷ்யந்தியின் பெரிய தகப்பனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைக்காக 23-10-94 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் புலோலி கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனஞ் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

புங்கடி, தகவல்

புலோலி தெற்கு: திருமதி தெ. பாலசுப்பிரமணியம்

புலோலி. சகோதரரும், மைத்துனரும்

விஜேதுங்கா தெரிவித்துள்ளார்.

பதாகவும், இது சம்பந்தமான தலைசிறந்த விசார

விக்க வேண்டியதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் பொதுச் செயலாளராக இருந்த விஜேசேகரா கொல்லப்பட்டதைத் தொடர்ந்தே அந்த இடத்திற்கு விமலசேன நியமிக்கப்பட்டுள்ளார்

# காமினி மேடைக்கு வந்து 15 நிமிடத்தில் குண்டு வெடித்தது

## அருகில் இருந்தவர் தெரிவிப்பு

(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் காமினி திசாநாயக்கா தனது உரையை முடித்துக் கொண்டு மக்களை நோக்கி வணக்கம் செலுத்தும் போது குண்டு வெடிக்கும் பாரிய சத்தம் கேட்டதாகவும் இதனைத் தொடர்ந்து தான் மேடையில் இருந்து கீழ் குதித்ததாகவும் இக் குண்டுவெடிப்பின் அதிர்வு பலமாக இருந்ததாகவும் மேடையில் நின்ற லங்கா தீப படப்பிடிப்பாளர் தெரிவித்துள்ளார்.

சம்பவம் நடைபெற 15 நிமிடங்களுக்கு முன்பாகவே காமினி திசாநாயக்கா கூட்டத்தில் கலந்து கொள்ள வந்ததாகவும் அப்போது நேரம் நள்ளிரவு சுமார் 12 மணியளவில் இருக்கும் என்றும் இதனைத் தொடர்ந்து இவர் 12.15க்கு தனது உரையை முடித்துக் கொண்டு வெளியேற தயாராக இருந்ததாகவும் அப்போது சில பாராளுமன்ற உறுப்பினர்கள் எழுந்து நின்றதாகவும் தெரிவித்த அவர் குண்டு வெடிப்பை அடுத்து என்ன நடந்தது என்பதை தன்னால் ஊகிக்க முடியாது இருப்பதாகவும் தெரிவித்தார்.

### தற்கொலை

பாரிய சேதத்தை விளைவிக்க முடியும் என்றும் கொழும்பில் இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

இதேசமயம் காமினி திசாநாயக்காவை இலக்கு வைத்த தற்கொலைப் படையாளி பிரசார மேடையில் இருந்து இரண்டாவது அல்லது மூன்றாவது வரிசையில் மக்களோடு மக்களாக நின்றிருக்கலாம் என பொலிசார் தெரிவிக்கின்றனர்.

## குண்டு வெடித்த இடத்தை சூழவும் வேலியமைப்பு

(கொழும்பு)

குண்டு வெடிப்பு இடம் பெற்ற இடம் சுற்றி அடைக்கப்பட்டதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

எவரும் குண்டு வெடிப்பு நடந்த இடத்திற்குச் செல்லவோ, குண்டு வெடிப்பு இடம் பெற்ற பகுதியில் இருந்து எவற்றையும் அப்புறப் படுத்தவோ முடியாதவாறே அப்பகுதி சுற்றி வேலி போடப்பட்டுள்ளது.

விசாரணைகளை மேற்கொள்ளும் பொருட்டே இவ்வாறு அடைக்கப்பட்டுள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதேவேளை சம்பவம் நடந்த இடத்தை உடனடியாக அரசு சுத்திகரிக்கமாட்டாது என தகவல்துறை அமைச்சர் தர்மசிறி சேனநாயக்கா தெரிவித்தார். போதிய சாட்சிப் பொருட்கள் குண்டு வெடிப்பு நடைபெற்ற இடத்திலிருந்து மீட்கப்படும் வரை அப்பகுதி தொடர்ந்து அப்படியே பேணப்படும் என அவர் தெரிவித்தார்

லலித். பிரேமதாசா போன்றோர் படுகொலை செய்யப்பட்டு அடுத்த நிமிடமே அவ்விடங்களை சுத்தமாக்க கடந்த கால அரசு எடுத்த நடவடிக்கைபோன்று தமது அரசு நடந்துகொள்ளாது என்றும் அமைச்சர் தெரிவித்தார்

### அடுத்த

பெயர்கள் அடிபடுவதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

இன்று மாலை கூடும் இக் கட்சிக் குழு தமது கட்சியின் ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்யும் எனவும் இதில் ரணில்விக்கிரமசிங்க தெரிவு செய்யப்படுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகமாக தென்படுவதாகவும் கொழும்பு செய்திகள் தெரிவிக்கின்றன

### உருக்குலையாத சடலங்கள்

குண்டு வெடிப்பில் கொல்லப்பட்ட காமினி உட்பட ஏனையவர்களின் சடலங்கள் ஏதும் உருக்குலையவில்லை என்றும் சடலங்களில் சன்னத் துண்டுகள் பாய்ந்த காயங்களே காணப்படுவதாகவும் பி.பி.ஸி தெரிவித்தது.

### ஐ. தே. க.

திபதியுமான டி. பி. விஜேதுங்கா இக்கூட்டத்திற்குத் தலைமை தாங்கவுள்ளார்.

இதேசமயம் ஐக்கிய தேசியக் கட்சி பாராளுமன்றக் குழுவினரின் விசேட கூட்டம் இன்று காலை 9 மணிக்கு பாராளுமன்றக் கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் கட்சியின் தலைவர் என்பவற்றோடு கட்சியின் பொதுச் செயலாளர், எதிர்க்கட்சித் தலைவர் போன்ற பதவிகளை நிரப்புவது தொடர்பாக இக் கூட்டம் கூட இருப்பதாகத் தெரியவருகின்றது.

(சின்னத்தம்பி)



### வீரவேங்கை தியாகராஜா

கடந்த 20ந்திகதி மட்டக்களப்பு மாவட்டம் வாழைச்சேனை விநாயகபுரம் என்னுமிடத்தில் இராணுவத்தினர் பதுங்கியிருந்து தாக்கியதில் விடுதலைப் புலிகள் போராளிகள் இருவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டனர்.

வீரச்சாவடைந்த வீரவேங்கை கிறிஸ்ரி - சின்னத்தம்பி (நாகலிங்கம் நாவேந்தன் மட்டக்களப்பு) வீரவேங்கை தியாகராஜா (விநாயகமூர்த்தி சிவநாதன், மட்டக்களப்பு) ஆகியோருக்கு விடுதலைப் புலிகள் வீரவணக்கம் செலுத்துகின்றனர்.

### 150பேர் கொண்ட மருத்துவக் குழு

(கொழும்பு)

நேற்று அதிகாலை பாலத்துறையில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் காயமடைந்தோரை கவனிக்கவென 150க்கும் மேற்பட்ட வைத்தியர்கள், தாதிமார்களைக் கொண்ட குழுவொன்று அமைக்கப்பட்டுள்ளது.

இவர்களைவிட வைத்திய நிபுணர்களும் கொழும்பு பெரியாஸ்பத்திரியில் சேவைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

### பேச்சுக்கள்

பெர்னாண்டோ தெரிவித்தார்

காமினி திசாநாயக்கா மரணமாகக் காரணமான குண்டுத்தாக்குதலுக்கு விடுதலைப் புலிகளே காரணம் என்பதால் இப்பேச்சுக்கள் ஒத்திவைக்கப் படவில்லை. பேச்சுக்களை நேற்று ஆரம்பிக்க சூழ்நிலை உகந்ததாக இல்லாமையினாலேயே இரண்டாம் கட்டப் பேச்சு நேற்று ஒத்திவைக்கப்பட்டது என லயனல் பெர்னாண்டோ தெரிவித்தார்.

### அமைப்பாளரும் மரணம்

(கொழும்பு)

நேற்று அதிகாலை இடம் பெற்ற குண்டு வெடிப்பில் ஐக்கிய தேசிய கட்சியின் வட கொழும்பு அமைப்பாளரும் மரணம் அடைந்துள்ளார்-

வட கொழும்பு அமைப்பாளரான கிறிஸ்டி பெரேரா என்பவரே கொல்லப்பட்டவராவார்-இவர் மேல் மாகாண சபைக்கு கொழும்பு மாவட்டத்தில் இருந்து தெரிவுசெய்யப்பட்டவர் ஆவார்-


## நன்றி கூறுகின்றேன்

16.10-1994 அன்று என்னால் தவறவிடப்பட்ட கைச்சங்கிலியை கண்டெடுத்து என்னிடம் ஒப்படைத்த காரைநகரைச் சேர்ந்த ச. சுந்தரேஸ்வரனுக்கும் சக இளைஞர்களுக்கும், செய்தியாக பிரசுரித்த ஈழநாதம் பத்திரிகை நிறுவனத்திற்கும், வலி-மேற்கு பிரதேச சபை பொது நூலகர் பா. விஜயகுமார் அவர்களுக்கும் எனது நன்றியை தெரிவித்துக்கொள்கின்றேன்.

அம்பாள் கிருபையால்

வழக்கம்பரை, பண்ணாகம். (6190) மு. சிவசிதம்பரக் குருக்கள் குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி

திரு- சாண்டோ எம்- துரைரெத்தினம் அவர்களின் மறைவைக் கேட்டு, அதிர்ச்சியும், கவலையுமடைந்தோம். அன்னாரின் மறைவு இவ் தமிழீழ மக்களுக்கு பேர் இழப்பாகும் அன்னாரின் பிரிவால் வாடும் அவரது குடும்பத்தவர்களும் உறவினர்களுக்கும், மாணவர்களுக்கும் எமது சங்க சார்பில் கண்ணீர் அஞ்சலியை செலுத்திக் கொள்கின்றோம்.

க. மு பத்மநாதன் (செயலாளர்)
வடபிராந்திய யாழ். ஆங்கில மருந்து வணிக மன்றம்

(சி-10576)

## 18 வது பிறந்த நாள் வாழ்த்து

யாழ். இந்துக் கல்லூரியின் வர்த்தகப்பிரிவு மாணவன் செல்வன்

K. P. கேமசபேசன் (கேமா)

இன்று (25-10-94) 37/5, முதலாம் ஒழுங்கை, பிறவுண் வீதியில் உள்ள தமது இல்லத்தில் தனது 18வது பிறந்த தினத்தை வெகு விமரிசையாகக் கொண்டாடுகிறார்-

அவருக்கு எங்கள் வாழ்த்துக்கள்
நண்பர்கள்.

(6192)

திபோகத்தர், கச்சேரி, வவுனியா) 22-10-94 சனிக்கிழமை அன்று காலமானார். அன்னார் காலஞ்சென்ற பெரியதம்பி பாலசுப்பிரமணியத்தினதும், தெய்வானைப்பிள்ளையினதும் சிரேஷ்ட புதல்வரும், சிவசுப்பிரமணியத்தின் பெறாமகனும், சங்காதேவி, பாஸ்கரதேவி, விபுலானந்தன் குமாரகுலசிங்கம், சிவராசகோபால், ஜெயராணி, ஜெயந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரரும், நவரட்ணராஜவேல், நாகநாதன், கெங்காதேவி, தேவகி ஆகியோரின் அன்பு மைத்துனரும், செந்தூரா, ஞானேந்திரா, தனலோஜினி, குகசங்கர் ஆகியோரின் மாமனாரும், துஷ்யந்தியின் பெரிய தகப்பனாரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் இறுதிக் கிரியைக்காக 23-10-94 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் புலோலி கருகம்பன் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டுத் தகனஞ் செய்யப்பட்டது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

புங்கடி, புலோலி தெற்கு: புலோலி.
தகவல் திருமதி தெ. பாலசுப்பிரமணியம் சகோதரரும், மைத்துனரும்

(6188)

## திருமதி கந்தையா கண்ணம்மா

மட்டுவில் தெற்கை வதிவிடமாகக்கொண்ட திருமதி சந்தையா கண்ணம்மா, காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற கந்தையாவின் அன்பு மனைவியும் திரு. வல்லிபுரம் (நீர்ப்பாசனத் திணைக்கள ஓய்வு பெற்ற D O A. -கல்முனை), செல்வி திரவியம் (கிராம அபிவிருத்தி இலாகா ஓய்வுபெற்ற தையல் போதனாசிரியை), திருமதி அழகம்மா, திருமதி தங்கரத்தினம், திருமதி தவமணி (உவெஸ்லி கல்லூரி ஆசிரியை - கல்முனை), செல்வி செல்வரத்தினம் (தொழில் திணைக்கள தையல் போதனாசிரியை), திருமதி புனிதவதி, திருமதி பூபதி (யாழ். போதனா வைத்திய சாலை), திருமதி அனுஷியாவதி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும், திருமதி தேவமாணிக்கம், திரு. பரமசாமி, திரு தியாகராசா, திரு. கோவிந்தசாமி, திரு. மாணிக்கம் திரு: துரைராசசிங்கம். திரு, மயில்வாகனம் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார் அன்னாரின் பூதவுடல் இன்று (25.10.94)செவ்வாய்க்கிழமை பி பகல் 2 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் இருந்து தகனக்கிரியைக்காக குச்சப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.
தகவல்: -பிள்ளைகள்

(6193)

## கண்ணீர் அஞ்சலி

### சாண்டோ மார்க்கண்டு துரைரத்தினம்

பருத்திநகர் தந்த பெருந்திறன் சான்றோன் சாண்டோ மார்க்கண்டு துரைரத்தினம் அவர்களின் மறைவையிட்டு அன்னாருக்கு எமது கண்ணீர் அஞ்சலிகள்.

அன்னாரை இழந்து துயருறும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக்கொள்கின்றோம்.

- மாணவர் அவை
யாழ். தொழில் நுட்பக் கல்லூரி.

(6191)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது